# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 21 ஞாயிற்றுக்கிழமை (05-07-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:187


## 16 தமிழ்க் கைதிகளும் விளக்க மறியலில்

கொழும்பு, ஜூலை 5

களுத்துறைச் சிறையில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இனங்காணப்பட்டனர் என்று கூறப்படும் 16 தமிழ்க் கைதிகளையும் இம்மாதம் 16 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு களுத்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக 16 பேர் இனங் காணப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். மேலதிக விசாரணைகளைத் தொடர்வதற்காக இந்த 16 பேரையும் 16 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

அதே சமயம் இரகசியப் பொலீஸாரும், சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நியமித்த ஒரு நபர் விசாரணைக் குழுவும் விசாரணைகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர். (இ-9)



அப்ப வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறாது எண்டதற்கு என்ன உத்தரவாதம்.........?

# செம்மணிப் பகுதியில் தேடுதல் நடத்துக!

## ஜனாதிபதியிடம் புளொட் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 5

கிருஷாந்தியின் சடலம் மீட்கப்பட்ட செம்மணி காவலரணை அண்டிய பகுதிகளில் மேலும் பல சடலங்கள் புதைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதால் அப்பகுதியில் தேடுதல் நடத்த நடவடிக்கை எடுக்குமாறு புளொட் அமைப்பின் உப தலைவர் என். மாணிக்கதாஸன் ஜனாதிபதியைக் கோரி உள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிய 'பக்ஸ்' செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

இன்று விடுதலைப் புலிகள் கரும்புலிகள் தினத்தை அனுஷ்டிப்பதையொட்டி, குடாநாட்டிலும், வவுனியாவிலும் நேற்று பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-5-36-15-139-9-164)

## தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 5

மாங்குளத்துக்குத் தென்மேற்கே படையினரின் நிலைகள் மீது நேற்று முன்தினம் புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ)

## கிருஷாந்தி வழக்குத் தீர்ப்புக்கு சர்வதேச மன்னிப்புச்சபை வரவேற்பு

கொழும்பு, ஜூலை 5

கிருஷாந்தி கொலை வழக்குச்சம்பந்தமாக வழங்கப்பட்ட தீர்ப்பு, இலங்கையில் மனித உரிமைகளைப் பேணும் விவகாரத்தில் ஒரு திருப்பு முனை ஆகும். இவ்வாறு சர்வதேச மன்னிப்புச்சபை கிருஷாந்தி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு தொடர்பாக நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்தத் தீர்ப்பு மனித உரிமைகளை மீறுவது இனி எப்

(10 ஆம் பக்கம் பார்க்க

**பளைச் சம்பவம்:**

## செஞ்சிலுவைமூலம் சடலம் பெற்றோரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

பளைப்பகுதியில் கடந்த முதலாம் திகதி இடம் பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்றில் உயிரிழந்த இனந்தெரியாத இரு சடலங்களில் ஒன்று அடையாளம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி வெடி விபத்தில் 10 புலி உறுப்பினர் மரணம்

வவுனியா, ஜூலை 5

வன்னி மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற வெடி விபத்து ஒன்றில் விடுதலைப் புலிகள் தரப்பில் 10 பேர் மரணமானதாக வவுனியாவில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மரணமானோர் பெயர் விவரம் வருமாறு:-

★ உதயன் அல்லது ரங்கராஜ் (செல்வரத்தினம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பற்றரி விழுங்கிய குழந்தை!

கொழும்பு, ஜூலை 5

சிறிய பற்றரி ஒன்றை விழுங்கியதால் 11 மாதக் குழந்தை ஒன்று மிகவும் ஆபத்தான நிலையில் பொரளை சிறுவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மருத்துவ வரலாற்றில் இதுபோன்ற சம்பவம் முதல் தடவையாக இடம் பெற்றிருப்ப

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாரதீய ஜனதா அரசுக்கு தொடர்ந்து ஆதரவு!

### ஜெயலலிதா அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 5

இந்தியாவில் ஆட்சியில் இருக்கும் பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணி அரசுக்கு இதுவரை காலமும் அளித்து வந்த ஆதரவை தற்போதைக்கு வாபஸ் பெறப்போவதில்லை என அ.தி.மு. செயலாளர் ஜெயலலிதா நேற்று அறிவித்தார்.

நேற்றுக் காலை தனது இல்லத்தில் அ.தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜெயலலிதா கூட்டம் ஒன்றை நடத்தினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 19 தமிழ் இளைஞர் ஜப்பானில் கைது!

வவுனியா, ஜூலை 5

இலங்கையிலிருந்து மீன் பிடி றோலர் ஒன்றின் மூலம் ஜப்பானுக்குள் நுழைய முயன்றதாகக் கூறப்படும் 19 தமிழ் இளைஞர்களை அந்நாட்டின் குடிவரவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இவர்களை ஏற்றிச் சென்ற மீன் பிடி றோலர் இவர்களை ஜப்பானில் இறக்கிவிட்டு திரும்பிவிட்டதாகவும்-

29 நாள்கள் கடலில் பயணம் செய்து பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலேயே இவர்கள் ஜப்பானைச் சென்றடைந்தனர் என்றும் ஜப்பான் நாட்டு குடிவரவு அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

## டக்ளஸ் உடல் நிலையில் நேற்று சிறிது முன்னேற்றம்

கொழும்பு, ஜூலை 5

களுத்துறை சிறைச் சாலையில் கடந்த முதலாம் திகதி தமிழ்க்கைதிகளால் படு மோசமாகத் தாக்கப்பட்ட ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் உடல் நிலையில் நேற்று சிறிது முன்னேற்றம் காணப்பட்டதாகக் கொழும்பு பொது வைத்தியசாலை டாக்டர்கள் தெரிவித்தனர்.

டக்ளஸ் தேவானந்தா நேற்று பேசுவதற்கு முயன்றார் என்றும் காலை அசைக்க முயன்றார் என்றும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

எனினும் அவரது நிலை இன்னும் திருப்தியானதாக இல்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டது (இ-21)

## படையினர் கட்டுப்பாடற்ற பகுதியில் வாந்திபேதி

### வட்டக்கண்டலில் ஒருவர் பலி

வவுனியா, ஜூலை 5

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாடற்ற வடடக் கண்டல் பகுதியில் வாந்திபேதி நோயினால் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

ஆறுமுகம் குபேந்திரா (வயது 16) என்ற இளைஞனே மரணமானவர் ஆவார்.

அதே சமயம் முல்லைத்தீவைச் சேர்ந்த புதுக்குடியிருப்பிலும் ஒருவர் வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்டுப் புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் வவுனியாவிலிருந்து கடந்த வியாழக்கிழமையே புதுக்குடியிருப்புக்குச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவருக்கு வவுனியாவில் இந்த நோய் தொற்றியிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

அதே சமயம் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதி முழுவதிலும் வாந்திபேதி நோய்த் தடுப்பு முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-164-9)

## உயிலங்குளம் ஊடான போக்குவரத்து நிறுத்தம்

வவுனியா, ஜூலை 5

உயிலங்குளம் ஊடான பயணிகள் போக்குவரத்து விடுதலைப் புலிகளின் சுகாதாரப் பிரிவினரால் நேற்று முதல் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக வவுனியா செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவக் கட்டுப்பாடுள்ள வவுனியா, மன்னார் பகுதிகளில் வாந்திபேதி நோய் அபாயம் உள்ளது என்றும்—

அங்கிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு பயணிகள் செல்லும் பொழுது அவர்கள் மூலம் கட்டுப்பாடற்ற பகுதிகளிலுள்ள மக்களுக்கும் இந்த நோய் பரவும் அபாயம் இருப்பதாகவும்—

இதனைக் கருத்தில் கொண்டே உயிலங்குளம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

## முத்துவிநாயகர் தேவஸ்தானம்

நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்து விநாயகப் பெருமான் ஆலயத்தில் கும்பாபிஷேக தினத்தை முடிவாகக் கொண்டு எதிர்வரும் **06-07-98** ஆனித் திங்கள் 22 ஆம் நாள் முதல் ஆனி மீ 31 புதன்கிழமை (15-07-98) வரை பிரதிதினமும் காலை 10 மணிக்கு நவகலச அபிஷேகமும் விஷேட பூஜையும் இடம் பெறும்.

மணவாளக்கோலதினமாகிய 15-07-98 புதன்கிழமை 108 சங்காபிஷேகமும், கணபதி ஹோமம், விஷேட பூஜை, உற்சவம் என்பனவும் இடம்பெறும்.

அடியார்கள் பூஜா காலங்களில் விநாயகரைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வார்களாக!

ச. சோமசுந்தரசர்மா
தேவஸ்தானம்

(57352)

யாழ். மாவட்ட
வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின்

## முக்கிய அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் (06-07-1998) நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஸ்ரான்லி வீதி, யாழ். தொழில் நுட்ப நிறுவனத்தில் (விக்ஸா அருகில்) நடைபெறும். இதில் நிர்வாக உறுப்பினர்களையும், இணைப்பாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி!

செயலாளர் தலைவர்

(சி/4201)

## அறிவித்தல்

### பால் விலை அதிகரிப்பு

எமது சங்கம் 06 - 07 - 98 ஆம் திகதியிலிருந்து பாலின் விற்கும் விலையை ரூபா 20 இலிருந்து ரூபா 21 ஆக அதிகரித்துள்ளது; இப்பாலின் முன்னைய விற்கும் விலை ரூபா 24 ஆக இருந்தது 01 - 01 - 98 ஆம் திகதி ரூபா 20 ஆகக் குறைக்கப்பட்டதை பாவனையாளர்கள் அறிவர். தற்போது விநியோகச் செலவினங்கள் அதிகரிப்புக் காரணமாக ரூபா 1-00 விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதுள்ளது. இதற்காக நாம் மிகவும் வருந்துகின்றோம். இந்நிலையிலும் பால் உற்பத்திப் பொருள்களின் விலையை நாம் அதிகரிக்கவில்லை என்பதை குறிப்பிடுகின்றோம்.

பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி-4194)

**மீண்டும்**

## R. G. ஸ்ரோஸ் யாழ். நகரில்!

இதோ வந்துவிட்டது!
ஸ்ருடியோவிற்குத் தேவையான
டெவலப்பர் ரிறே, கெமிக்கல்கள்
பிறின்டிங் பேப்பர்கள் படச்சுருள்கள்
மற்றும் பிளாஸ்ரிக் சாமான்கள்
பாடசாலை உபகரணங்கள்
அழகுசாதனப் பொருள்கள்
கைவேலைப் பொருள்கள் வாழ்த்துமடல்கள்
யாவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(57357)

## வேலைவாய்ப்புபடிவம்

தென்மராட்சிப் பிரதேசத்தில் சுயதொழிலில் ஈடுபடவுள்ள இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புப் படிவங்கள் பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவினரால் வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

G. A. Q. 99

தமிழ்:
Mr. வைகுந்தநாதன் B A
ஆரம்பம்: Mon. 6/7 - 5p.m.
கிறிஸ்தவம்:
Mrs. A. மல்லிகா B.A.
இந்து நாகரிகம்
Mr. நித்தியானந்தன் B.A.

★ O/L, Yr.10, 9 & 8
**SHAMROCK**
(சி/4200)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று மட்டும்
ஸ்ரீபிரியா - கமல்
விஜயகுமார் - லதா
நடித்த
**நீயா**
திங்கள், செவ்வாய்
ரஜனி - பிரபு - ராதா
நடித்த
**தர்மத்தின் தலைவன்**
நேரம்:- 10-30. 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(57309)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
கடைசி வாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
**பாட்ஷா**
அடுத்த வெளியீடு!
**சத்ரிய வம்சம்**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3917)

## நாகம்ஸ்

சினிமா
சுன்னாகம்.
அகல வெண் திரையில்
05-07-98 ஞாயிறு முதல்
பிரபு, ரம்பா,
சத்தியராஜ் நடித்த
**சிவசக்தி**
CD வெளியீடு
காட்சிகள்:- 10-30, 2-30
(57361)

## YOGI HOME SCIENCE ACADEMY

### புதிய வகுப்புகள் 10 - 07 - 98 முதல் ஆரம்பம்

1) இலகுவழித் தையல் ( Cutting Classes )
2) கேக் ஐசிங் ( Birthday Cakes and Wedding Structures )
3) மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் ( Fondant Icing and Sugar Craft )
4) நவீன சமையல் முறைகள்
5) பூக்கள் தயாரித்தலும், அலங்கரித்தலும்.
6) துணியில் வர்ண அலங்கரிப்பு 7 வகுப்புகள் மட்டும் ( Modern Fabric Paintings)

விசேட பயிற்சி நெறிகள்:
Basic Make - Up and Hair Dressing
[ அடிப்படை ஒப்பனையும் தலை அலங்காரங்களும் ]

இதில் பாடக்குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்கள், சகல வைபவங்களுக்குமான முக ஒப்பனைகள், நவீன புதிய தலை அலங்காரங்கள், இந்திய, சிங்கள, குஜராத்தி மடிசார் போன்ற வித்தியாசமாக சாறி அணியும் முறைகள், இந்த பயிற்சி நெறி 15 வகுப்புகள் மட்டும். முடிவில் செயல்முறை பரீட்சைகள் மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சேர விரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்:

75, அம்மன் றோட், ( நல்லூர் வீரமா[illegible] )
யாழ்ப்பாணம்.

(57355)

## இதய அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக 1 ஆம் வருட மாணவன்
பொ. சிறிதரன்
அவர்களின் சகோதரன்

### பொன்னம்பலம் பகிதரன்

02 — 07 — 1998 அன்று வன்னியில் காலமானார்.
இவருக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1 ஆம் வருட மாணவர்கள்,
கலைப் பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(57369)

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### தம்பு பொன்னம்மா

அச்செழு, நீர்வேலியைச் சேர்ந்த திருமதி தம்பு பொன்னம்மா 04. 07. 98 சனிக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் தம்பையா தம்புவின் அன்பு மனைவியும், தனபாக்கியம், தனேஸ்வரி (கனடா) ஆகியோரின் தாயாரும், பாலசிங்கம் (இளைப்பாறிய பொறியியலாளர், தொலைத்தொடர்புத் திணைக்களம்), கிருஷ்ணபிள்ளை (ஓமான்) ஆகியோரின் மாமியாரும், நந்தினி, ஜெயந்தினி (ஆசிரியை, முஸ்லிம் மகாவித்தியாலயம், மாத்தறை), நந்தகுமாரன் (கனடா), ஜெயகுமாரன், துஷ்யந்தன், மகாத்மன் (கனடா), வைகுந்தன் (கனடா), பகலதன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05. 07. 98) ஞாயிற்றுக்கிழமை காலை 10 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்செழு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. பாலசிங்கம்
(மருமகன்)

அச்செழு
நீர்வேலி.

(57366)

திருமதி

### கனகரத்தினம் செல்லாச்சி

திருமதி கனகரத்தினம் செல்லாச்சி 04. 07. 1998 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் (டாக்டர்) அன்பு மனைவியும் திலகரத்தினம், அருட்பிரகாசம் (ஜேர்மன்), செல்வப்பிரகாசம் (ஆசிரியஆலோசகர், கோப்பாய் கல்விக்கோட்டம்), கருணப்பிரபா (டிக்கோயா எஸ்ரேற்), சந்திரபிரபா ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்னரத்தினம் (கோகிலாக்கண்டி), கிருபாலட்சுமி (ஈவினை), பாலகுமார் (சாரையடி), சிறிராகவன் (வியாபாரிமூலை) ஆகியோரின் மாமியாரும் துளசியின் பேர்த்தியாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. செல்வப்பிரகாசம்
(மகன்)

நீலிப்பழந்தை,
வதிரி,
கரவெட்டி.

(57368)

### கந்தையா திலகவதி

மீசாலையைச் சேர்ந்த கந்தையா திலகவதி காலமாகிவிட்டார்.

இவர் அமரர் கந்தையா அன்னம்மாவின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், லவக்குமார், சூரியகுமாரி, சதீஸ்குமார், ஸ்ரீகௌரி ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயகீதா, லாவண்யா, ரிஷி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், ஜெகதீசன், சுலோசனா ஆகியோரின் அருமை மாமியாரும், புனிதவதி, காலஞ்சென்ற இராசபூபதி, கமலாவதி, புஸ்பவதி, காலஞ்சென்ற கைலாசபதி, ஸ்ரீபதி, கருணபதி ஆகியோரின் சகோதரியும், இராசையா, செல்லப்பா, சிவக்கொழுந்து, சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (5-07-98) ஞாயிற்றுக்கிழமை பகல் 1-00 மணியளவில் மீசாலை கண்டி வீதி, இல்லத்திலிருந்து வேம்பிராய் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கருணபதி
(சகோதரன்)

கண்டி வீதி,
மீசாலை.

(57365)

### இராமநாதன் யோகலிங்கம்

பருத்தித்துறை நாகலிங்க முதலியார் வீதியைச் சேர்ந்த இராமநாதன் யோகலிங்கம் 1-7-98இல் இலுப்பைக் கடவையில் (மன்னார்) இயற்கை மரணமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலுப்பைக்கடவையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
யோ. கண்ணன்
(மைத்துனன்)

வல்வெட்டித்துறை.

(57362)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாரை நாடி அவர் சொற்கேட்டால் வாழ்க்கையில் நன்மைகள் ஓடி வரும்

மக்களை நல்வழிப்படுத்தும் பொருட்டு ஔவையார் பாடியுள்ள ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம் நல்வழி நன்னெறி எனும் நூல்கள் காலத்தால் அழியாத சிறப்பு வாய்ந்தவை. சிறுவயதிலேயே அவற்றை மனனஞ் செய்து கொண்டு அந்தப் புத்திமதிகளைப் பின்பற்றி வயதாகும் வரை வாழ்ந்து நற்பெயரெடுக்கலாம்.

இவற்றுள் வாக்குண்டாம் என்னும் நூலிலே வரும்—

நல்லாரைக் காண்பதுவும்
நன்றே; நலமிகக
நல்லார்சொற் கேட்பதுவும்
நன்றே;–நல்லார்
குணங்கள் உரைப்பதுவும்
நன்றே; அவரோடு
இணங்கி யிருப்பதுவும்
நன்று;

— என்னும் பாடல் மிகவும் முக்கியமானது.

பொதுவாக அறிஞர்கள், தமது சுயசிந்தனையினாலே ஒரு விஷயத்தைச் சொல்லும் போதும் ''என்று பெரியோர் சொல்லுவார்கள்'' என்ற பெருமையடிக்காமல் கூறுவது மரபு. இது ஒரு வகையில் தன்னடக்கமாக இருக்கலாம். இன்னொரு வகையில், தாமும் சற்றுணர்ந்த நல்லார்கள் வாயிலாகத்தான் இவற்றை அறிந்ததாகக் கூறுவதாயுமிருக்கலாம்.

ஆனால் அந்தவகையில் ஔவையார் இருவகைகளையும் கையாண்டிருக்கிறார் ''அறஞ் செய்ய விரும்பு'' ''ஆறுவது சினம்'' என்று ஆணி அறைந்தது போலவும் கூறுவார்; ''பட்டாங்கிலுள்ளபடி'' (நீதி நூல்களிலே கூறப்பெற்றுள்ளபடி) என்றும் கூறுவார்.

எனினும் நாம் நமது சொந்தப் புத்தியிலே தங்கியிருக்கக் கூடாது; பெரியோர்களுடைய புத்திமதிகளையும் கேட்டு ஒழுக வேண்டும்; என்பதனை மேற்படி பாடலிலே வெளிப்படையாகக் கூறியிருக்கின்றார்.

பலவிதமான குணாதிசயங்களைக் கொண்ட மக்கள வாழும் இந்த உலகம் ஒரு நாடகசாலை போன்று, குணசித்திர நடிகர்களாகிய நல்லாரை மையமாக வைத்துத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

''உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு'' என்ற முதுமொழி கூறுவது என்ன? தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் பலர் இருப்பதனால்தான் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதுதான்.

சூரியகாந்தி உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

மேலும் —

ஈன்று புறந்தருதல் என்
தலைக்கடனே;
சான்றோனாக்குதல் தந்தைக்
குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்
குக் கடனே;
களிறு எறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே.

என்று பழந் தமிழ்ப் பெண்ணொருத்தியின் கூற்றாக அமைந்த இப்பாடலிலே தாய், தந்தை, அரசன், மகன் ஆகியோரது கடமைகள் கூறப்பெற்றுள்ளன.

அன்றியும், ''மகன் தந்தைக்காற்றுமுதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனுஞ் சொல்'' என்று தெய்வப் புலவர் தந்தை மகனுக்கு அறிவூட்டி

## நீதிநூல்களை தேடிப்பயின்று அவை வழி ஒழுகின் உயர்வு

அவையிலே சிறக்க வைத்தால் மகன் நல்லவனென்று பெயரெடுக்க வேண்டுமென்பதையும், ''தாய் தன் மகனைச் சான்றோனெக்கேட்டு ஈன்ற பொழுதிற் பெரிது உவக்கும்'' எனவும் கூறியிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

ஆகவே மக்கள் நல்லவர்களாக வாழ வேண்டுமென உலகம் எதிர்பார்க்கிறது. அதற்கு நல்லாரைப் பின்பற்றி ஒழுகுதலும் ஒரு வழியாகும்.

நல்லவர்கள் உலகில் இருக்க வேண்டியதன் அவசியத்தை ஔவையாரே தமது இன்னொரு பாடலில் கூறியிருக்கிறார். ''நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை'' என்று மழை பெய்ய வேண்டுமானால் உலகில் நல்லவர்கள் வாழ வேண்டுமெனக் காட்டுகின்றார்.

### நன்மைகள்

அதனால நல்லாரைக் காண்பது, அவர் சொற்களைக் கேட்பது, அவர் குண நலங்களைப் பாராட்டுவது, அவரோடு இணங்கி நடப்பது என்பவற்றின் நன்மைகளைப் பார்ப்போம்.

நல்லாரைக் கா பது என்பது நல்லார் ஒருவரிடஞ் சென்று ஓர் ஆலோசனையை அல்லது சந்தேகத்தைக் கேட்டுப் பெறுதலாகும். ஒரு மாணவன் தனது உயர்கல்வி பற்றி தனது ஆசிரியரிடமோ அல்லது வேறொருவரிடமோ சென்று கதைக்கலாம். ஒரு குடும்பத் தலைவன் ஒரு பெரியாரிடம் தனது மனக் குறைகளைக் கூறி நல்வழி கேட்கலாம். அப்பொழுது அவர்கள் சொல்லுவனதான் வேதம் எனக் கொள்ளவேண்டுமென்பதும் இல்லை. ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்ற பொய்யாமொழியாரை நினைவு கூர வேண்டும். இதற்காகவே மன்னர்கள் தமது சபையிலே கற்றுவல்ல, நற்குணம் படைத்த மதியூகிகளை மந்திரிகளாக வைத்திருந்தார்கள். நல்ல புத்திகேட்பதற்காகவே புலவர்களை அரசர்கள் ஆதரித்தார்கள்.

இனி, தாய் தந்தையராய் உள்ளவர்கள் தம் பிள்ளைகளுக்கு நல்லனவற்றையே சொல்லுவார்கள். அதனால் ஆரம்பத்தில் தாய் தந்தையர் சொற்படி பிள்ளைகள் நடக்கப் பயில வேண்டும். பின்னர் ஆசிரியர் சொற்படியும் வேறு பெரியோர் சொற்படியும் நடக்கலாம்.

மேலும், நல்லாருடைய வாழ்க்கை வரலாறுகளைப் பிள்ளைகள் தேடிப் படிக்க வேண்டும். வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் தாம் சொற்பொழிவுகளைக் கேட்கவேண்டும். நல்லவர்களாக வருவதற்குத் கல்வியோடு கேள்வி ஞானமும் கைவர வேண்டும்.

நல்லவர்களைப் பின்பற்றியே நல்லவர்கள் உருவானார்கள் பழைய இலக்கியங்களிலே இவ்வுண்மையைக் காணலாம்.

இராம இலக்குமணர்கள் தந்தை, தாய், குரு என எல்லோரையும் மதித்து, சொற்கேட்டு நடந்து நல்லபெயரெடுத்தார்கள். ''பரதன் நாடாள வேண்டும்; இராமன் வனமேக வேண்டும்; இது அரசனது ஆணை'' என்று சிற்றன்னை கூறியதும், மறுபேச்சின்றி இராமன் வனம்போகின்றான். ''மன்னவன் பணியன்றாகில் நின் பணி மறுப்பனோ'' என்று அந்த அளவிலேயே இராமன் தந்தை தாய் சொல்லை மதித்துக் காடுசென்றான்.

நல்லவனான இராமன் சொற்படி நடப்பதே பழக்கமாகக் கொண்டிருந்த இலக்குமணன், அவன் கேளாமலே பின்தொடர்ந்து சென்றான். இராமனிருக்கும் இடந்தானே அயோத்தி என்று சீதையும் பின்தொடர்ந்தான், அண்ணனுக்கும் அண்ணிக்கும் பணிவிடை செய்யவும் மெய்ப் பாதுகாப்பளிக்கவும் தாயின் நல்லுரையைத் தலைமேற் கொண்டு சென்றான் இலக்குமணன்.

வசிட்டர், விசுவாமித்திரர் முதலியோரது நல்லுபதேசத்தைக் கேட்டுநடந்து

**மட்டுவில் நல்லதம்பி**

(4 ஆம் பக்கம் பார்க்க)

# எதிரொலி:-

● அரசாங்க மருந்துவ அதிகாரிகள் சங்கம் ஏற்பாடு செய்த இரத்ததான வைபவத்தில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்வதற்கு எந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் முன்வரவில்லை.

★ முதலில் யாராவது அவர்களுக்கு ''இரக்க தானம்'' செய்யவேண்டுமாக்கும்!

● மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் ஜெயசிக்குறு'' நடவடிக்கை பாதிக்கப்படும் எனப் பௌத்த மதக் குருபீடம் அஞ்சுகின்றது.

★ ''புத்தம் சரணம் கச்சாமி என்று சொல்ல வேண்டியவர்கள்'' ''யுத்தம் சரணம் கச்சாமி'' என்று சொல்கின்றார்களோ?

● தேர்தல் பணியிலே படையினரை ஈடுபடுத்துவதற்கு அநுருத்த கடும் எதிர்ப்பு.

★ அங்கேயும் பணிக்காலம் எல்லையின்றி நீண்டு விடாதே; பின்னர் அச்சமும் எதிர்ப்பும் ஏனோ?

● யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் கொழும்பிலேயுள்ள த. வி. கூட்டணி அலுவலகத்திலே சத்தியப் பிரமாணஞ் செய்து பதவி ஏற்றனர்.

★ மாநகர சபைக் கூட்டங்களையும் கொழும்பிலே நடத்த வேண்டும் என அவர்கள் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தாலும் ஆச்சரியமில்லை.

● முன்னர் எதிர்க் கட்சித் தலைவருக்குச் சொன்னபடி, ஜனாதிபதித் தேர்தலை பதவிக்காலம் முடியு முன்பே நடத்தப் போவதில்லை என அரசு அறிவித்துள்ளது.

★ ஜனாதிபதி முறையையே ஒழிக்கப் போவதாகச் சொலலிக் கொண்டு பதவிக்கு வந்தவர்கள் இப்போது அது தம்மை விட்டு ஓடி ஒளிந்து கொள்ளும் எனப் பயப்படுகின்றார்கள்!

● அரசு கவிழ்ந்தாலும் சென்னையில் தி. மு. க. அரசைக் கலைக்க மாட்டோம் எனப் பிரதமர் வாஜ்பாய் அறிவித்துள்ளார்.

★ அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்கே அடிபணியாதவர், அம்மையாரின் அழுத்தத்துக்கா அசையப் போகின்றார்?

● பட்டதாரிகள் உண்ணாவிரதம்; கப்பல் விடக் கோரி உண்ணாவிரதம்; நிவாரண நிறுத்தத்தை எதிர்த்து உண்ணா விரதம் ......

★ மக்கள் பட்டினி கிடக்கப் பயிற்சி எடுக்க வேண்டிய அவசியம் உருவாகிவருகின்றதோ என்று ஐயுறவேண்டியுள்ளது.

— இடியன்

# அன்புநிறை அம்மாவே ...!

அன்பு நிறை அம்மாவே ...!

தங்கள் 28 — 06 — 98 திகதியிடப்பட்ட கடிதம் கிடைக்கப் பெற்றேன். கடிதத்தில் உள்ள சகலதும் வாசித்தேன். இதுவரை இவ்வளவு விடயங்களில் ஏதாவது ஒன்றைக்கூட எனது உறவினர்களோ, நண்பர்களோ ஒருவர் கூட விமர்சித்தது கிடையாது.

> இன்றைய பெண் பிள்ளைகளின் வாழ்க்கைப் போக்குக் கண்டு தாய் ஒருவர் தமது மகளுக்கு எழுதுவது போன்ற மடல் கடந்த வார சூரியகாந்தியில் வெளியாகி இருந்தது.
>
> அந்த மடலுக்குப் பதில் எழுதுவதாகப் பல கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் ஒன்றை இங்கே வெளியிடுகின்றோம்.
>
> இந்தப் பதில் கடிதத்தை எழுதியவர் ''*விஜயம்*'' வங்கி ஒன்றில் அதிகாரியாகப் பணிபுரிபவர்.
>
> ஏனைய பதில் கடிதங்களின் கருத்தின் வகை கண்டு அவை தொடர்ந்து பிரசுரிக்கப்படும். அவற்றுக்குத் தாய்மாரும். பதில் எழுதலாம்.

ஆனால், உங்கள் கடிதத்தை வாசித்து முடித்து எனது கைப்பையில் வைத்துவிட்டு, நித்திரைக்குப் போன எனக்கு உறக்கம் வரவில்லை. ஏனெனில் நானும் உங்களுக்குப் பல விடயங்களை எழுத வேண்டுமென்று எண்ணுவதுண்டு. ஆனால் உங்களைப் புண்படுத்த வேண்டாம் என்றுதான் எழுதுவதில்லை. ஆனாலும் சில விடயங்களை உங்களுக்கு ஒருநாள் எழுதத்தானே வேண்டும் என்ற உந்துதலில் இந்த மடலை வரைகிறேன்.

நீங்கள் குறிப்பிட்டபடி எனது மூத்த சகோதரர்கள் இருவர் வெளிநாட்டில் வசிப்பதுதான் உங்களுக்குத் தெரியும். ஆனால் மிக அண்மையில் எனக்குக் கிடைத்த தகவல்களின்படி எனது மூத்த அண்ணா ஜேர்மனியில் ஒரு ஜேர்மன் பிள்ளையைத் திருமணம் செய்து மதம் மாறி இருப்பதும், எனது இளைய அண்ணர் சுவிஸ் நாட்டில் ஒரு சுவிஸ் பிளளையை 'றெஜிஸ்டர்' செய்து ஒன்றாக வாழ்வதும் உங்களுக்குத் தெரிந்து இருக்க முடியாது.

ஏனெனில் அவர்கள் உங்களுக்கு அனுப்பும் பணமும், கடிதங்களும் மட்டுமே உங்களுக்குத் தெரிந்தவை. அவர்கள் இந்த லட்சணத்தில் என்னைக் கரை சேர்ப்பதாக நீங்கள் காணும் கனவு பகற்கனவு என்பதை நீங்கள் உணர வேண்டும். நீங்கள் இன்னும் பழமையிலேயே ஊறி பெண்ணியல்புகளை மறைத்து, ஒடுக்கி வாழும் சமூக சூழலையே கண்முன்னே காண்கிறீர்கள்.

நீங்கள் எனக்குச் சொல்லா விட்டாலும் நீங்கள் எவ்வளவு காணிகளையும், நகைகளையும் ஈடுவைத்து லட்சக் கணக்கில் செலவழித்து அண்ணர்களை வெளிநாடு அனுப்பினீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால் அவர்கள் இப்போது பிச்சையாக உங்களுக்கு மாதாமாதம் வங்கிக்கு அனுப்பும் பதினையாயிரம் ரூபா மட்டுமே உங்களுக்குப் பெரிதாகத் தெரிகின்றது. அதனால் அவர்களின் குறைகளை நீங்கள் எவருக்கும் கூறமாட்டீர்கள் ஏனெனில் அவர்கள் மகன்மாராச்சே...!

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயத்தில் புரையோடிய புண்களை மாற்றுவது யார்?

மனிதன் மாற்றங்களைக் காணத்துடிக்கின்றான். புதியனவற்றுக்கு ஈர்க்கப்படுகின்றான். இலகுவான வழிமுறைகளைக் கையாள விழைகின்றான். நோக்கம் நிறைவேற எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கின்றான். இன்றைய நவீன உலகம் இதற்கும் வழி சமைத்துக் கொடுத்திருக்கின்றது.

தற்காலிக இன்பங்களை சுலபமாக அடையும் வழிமுறைகளும் தாராளமாக மலிந்துள்ளன. ஆனால் மனிதனின் மாண்பை வைத்துத் தான் இத்தனையும் நடைபெறுகின்றனவா என்றால் அது தான் இல்லை. யாவும் லாப நோக்கமாகவே இருக்கின்றன. வீழ்ந்ததைத் தூக்கி விடவோ, துயருற்றவனுக்கு ஆறுதல் சொல்லவோ துணிந்து சமுதாயக் களத்தில் நிற்பவர்கள் அரிதாகவே உள்ளனர்.

இயேசுவும் தம்முடைய சீடர்களைப் பணிக்கு அனுப்பும் போது "அறுவடையோ மிகுதி; வேலையாட்களோ குறைவு — புறப்பட்டுப்

**ஞாயிறு நற்பிரசாதம்**

போங்கள் ஓ நாய்களிடையே ஆட்டுக் குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை அனுப்புகிறேன்" என்றார் (லூக். 10:2-3)

இன்றும் இதே நிலை தொடர்வதைத் தான் காண்கின்றோம். ஆன்மீகத்திலும் உலகியல் பணிகளுக்கும் இப்பஞ்சம் இருப்பதைக் காணும் போது 'விடிவு' வெகுதொலைவில் என்பது தான் மிகத் தெளிவாகத் தெரிகின்றது. கிறிஸ்து சொன்னார்: "அங்கு உடல் நலம் குன்றியோரைக் குணமாக்கி, இறையாட்சி அவர்களை நெருங்கிவிட்டது எனச் சொல்லுங்கள்" (லூக். 10:9)

அன்ரனி பீற்றர்

சமுதாயம் இன்று உடல், உளநோய்களால் பாதிக்கப்பட்டவர்களையே உருவாக்கி வருகின்றது. இவர்களைக் குணமாக்க யார் முன்வருவார்கள்? நான் உண்டு எனது குடும்பம் உண்டு, எனது தொழில்துறையுண்டு, எனது

(8ஆம் பக்கம் பார்க்க)

# சைவ சமயத்தின் தத்துவங்களை தர்க்கரீதியாகத் தரும் நூல்

**நூல் வரிசை**

'ஆசாற் சாரந்து (நூல்களாகிய) அவை அமைவரக் கேட்டல்' என்னும் கற்றல் மரபினைப் பேணிக் கற்றதொரு நன்மாணாக்க பரம்பரையிலே வந்தவர் பண்டித வ. நடராஜா செந்தமிழ் இலக்கண இலக்கிய வரம்பு கடவாது பழந்தமிழ் நூல்களையும் வடமொழியையும் ஐயந்திரிபறக் கற்று

**நூல்: இறை ஒருவர்**
**ஆசிரியர்: பண்டித. வ. நடராஜா**

ணர்ந்து கற்றாங்கொழுகிய சுன்னைக் குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கர் மகாவித்துவான் சி. கணேசையர் அவர் நாவலர்தம் மருகரான வித்துவ சிரோமணி பொன்னம்பல பிள்ளைக்கும் மாணாக்கர். இவரிடம் தமிழிலக்கிய இலக்கணம் கற்ற பெரும்பேறு பண்டித வ. நடராஜா அவர்களுக்குண்டு. அன்னவர் ஆக்கித் தமிழ்கூறும் நல்லுலகிற்கு உவந்தளித்த நூலே 'இறை ஒருவர்' என்பது.

"அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே" என்பதில் வித்துவசிரோமணி உறுதியான நம்பிக்கையுள்ளவர். எனவே அவர் தம் மாணாக்க பரம்பரையினரான பண்டித வ. நடராஜா அவர்களும் தமிழிலக்கியங்களைஇலக்கிய நோக்கில் நின்றுண்டதோடு அமையாது அவற்றினை இலக்கண உரைகல்லிலே உரைத்தும் சமயக் கண்கொண்டு நோக்கியும் 'இறை ஒருவர்' என்னும் நூலினை ஆக்கியமைவியப்பன்று.

இந்நூலிலே சைவசித்தாந்தக் கருத்துக்களும் அக்கருத்துக்களை நிறுவுவதற்கான மெய்கண்ட சாத்திரங்களின் மேற்கோள்களும் பொருத்தமுறக் கையாளப்பட்டுள்ளமை விதந்துரைக்க வேண்டுவதாகும்.

"நன்னூல் ஆசிரியர் மொழிக்கு முதற்காரணமாய் எழுமணுத்திரளின் 'ஒலி' எழுத்து என விளக்குகிறார்: ஒலிதான் எழுத்து எனக் கூறுகிறார். "ஓசை, ஒலியெலாம் ஆனாய் நீயே" எனத் தொடங்கும் திருத்தாண்டகத்தில் வரும் 'ஒலி' என்பது போன்றதுதான். அணுத்திரளால் வரும் ஒலி என்பதும் ஒலிக்கு முந்திய தாகிய 'ஓசை' என்பது அணுத்திரள போன்றது. அவை இரண்டும் முறையே அருவம் (ஓசை), அருவுருவம் (ஒலி) போன்றவை எனல் பொருந்தும். "இனி 'அ' என்னும் எழுத்து (எழுதப்படும் எழுத்து) 'அ' என்ற வடிவம் பெறுகிறது. ஆகவே உருவம் என்னும் தன்மை கொண்ட வடிவம் ஆயிற்று. எனவே ஓசை, ஒலி, எழுத்து என்பன 'அரு', 'அருஉரு', 'உரு' என்பவற்றுடன் ஒப்புமை உடையன. இவற்றால் அகர உயிர் இறைக்கு உவமை ஆயிற்று"

**சொக்கன்**

இந்த மூவகைத் திருமேனிகளினதும் வெளிப்பாட்டினைத் திருஞானசம்பந்தரது 'தோடுடைய செவியன்' என்ற தேவாரத்தை எடுத்துக்காட்டாய்க் கொண்டு, பண்டிதர் விளக்கும் திறம் குறிப்பிடத்தக்கதாகும். 'திருஞானசம்பந்தரை அவர் தந்தையார், உனக்குப் பாலூட்டியது யார்?' என்று கேட்ட போது, 'தோடுடைய செவியன்' என, சம்பந்தர், அவர் அகக்கண்ணுக்குப் புலனாகியவாறு இறையைக் குறிப்பிட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# எல்லா இன மக்களினதும் பேரன்பை பெற்று சிறப்பாக பணிபுரிந்த பேராயர்

சிறந்த பக்தியும், அயராத உழைப்பும், தளராத உறுதியும், செயலாற்றும் திறனும் கொண்டு விளங்கிய கொழும்பு திருமண்டலப் பேராயர் அதிவணக்கத்துக்

**நீத்தார் நயப்புரை**

குரிய யே. யே. ஞானப்பிரகாசம் ஆண்டகை கடந்த நவம்பர் மாதத்தில் நித்திய இளைப்பாற்றுதலும் நீங்கா வெளிச்சமும் பெற்று இறைவனடியில் இணைந்துகொண்டார்.

இவர் ஞானப்பிரகாசம் தம்பதிகளின் புதல்வனாக கண்டி மாநகரில் பிறந்தார். கண்டி திரித்துவக் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் [illegible] சிறந்தமாணவனாகத்திகழ்ந்தார். கல்வியில் மாத்திரமல்ல கிறிஸ்தவ செயற்பாடுகளிலும் மிகவும் கரிசனை உடையவராகச் செயற்பட்டார். கல்லூரிப்படிப்பை முடித்துக் கொண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் இணைந்து பல்கலைக்கழகப் பட்டம் பெற்று பட்டதாரியானார்.

சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் இறைவனின் அழைப்பை ஏற்று இறையியல் கல்லூரியில் சேர்ந்து சிறந்த பக்தியும், தேவபயமும் உள்ள குருவாக வெளியேறினார். சில ஆண்டுகள் உதவிக்குருவாகப் பணியாற்றிய பின்னர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

திறமையும், நற்பண்பும் இலங்கைத் திருச்சபையின் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள ஆலயங்களில் பணி புரிந்தார். ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் திறமை பெற்றிருந்தமையால் தென்னிலங்கையிலும் பல தமிழ் சபைகளுடன்

**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

இணைந்திருந்த சிங்களசபைகளிலும் சிங்கள மொழியில் ஆராதனைகளை நடத்தி திருவழிபாடுகளையும் திருவிழுந்து ஆராதனையும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# அன்புநிறை அம்மாவே...

(மூன்றாம் பக்கத் தொடர்)

எங்கள் வயதை ஒத்த மற்றப் பிள்ளைகளைப் பார்த்து எமது சமூக சூழல் மாற்றங்களை அனுசரித்து எனது நடை உடை பாவனைகளை இன்று மாற்றிக் கொண்டது உண்மையே.

*தரமானவை இல்லை*

ஆனால நீ நினைப்பது போன்று விகற்ப எண்ணங்கள் என்னை நாடுவதில்லை. இக்காலத்து நாவல்களையோ, பத்திரிகைகளையோ, படங்களையோ நான் விரும்பி அணுகுவதில்லை. ஏதோ பொழுதுபோக்கு அம்சங்களாகவே நாடுகிறேன். அதற்காக அவை எல்லாம் தரமானவை என்று கூறவில்லை. ஆனால் அதை விட்டால் வேறு எதுவும் கிடைக்கவில்லையே. இதற்கு எமது பழமைவிரும்பிகள் புத்திஜீவிகள், சமுதாயத் தலைவர்கள் ஏதாவது செய்தால் என்ன? ஏன் செய்கிறார்கள் இல்லை? எல்லாமே பணத்திற்காகவே இயங்குகின்றன.

உனக்குத் தெரியும் எமது நாட்டிலுள்ள மாப்பிள்ளைத் தட்டுப்பாடு. இதை வைத்து நம்மவர்கள் எத்தனைபேர் உழைக்கின்றார்கள்? தரகர், மண்டபம், ஐயர், மேளம், சோடினை, ரி.வி, சமையற்காரர் இப்படி எத்தனையோ பேர். ஆனால் இருபதோ இருபத்தைந்தோ லட்சம் சீதனம் கொடுத்து மூன்று லட்சம் செலவழித்துச் செய்த திருமணம் மூன்றாம் நாளே மணப்பெண்ணின் மனதுக்குள் குமைந்து விடுகிறது. அவளது அந்தஸ்துக்கும், படிப்புக்கும் உளவியல் ஒருமைப்பாட்டிற்கும் ஏற்ற மாப்பிள்ளை கிடைத்தாரா? இல்லவே இல்லை!

*சீமந்தம்*

எனது தோழிகளில் பலர் கைக்குழந்தையோடு இன்றும் நீதிமன்ற வாசலிலே நிற்கிறார்கள். வீட்டுச்சுமை, குடும்பச்சுமை, உத்தியோகச்சுமையோடு வீட்டிலே கல்லுப்போலிருக்கும் கணவருக்கு சிகரட், மதுபானத்துக்கும் செலவுக்காகப் பணம் கொடுக்கவேண்டிய அவஸ்தை. இவற்றை எல்லாம் எமது இன்றைய பெண் சமுதாயம் ஏற்றுக்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலைதான். எமது அரசியல் பொருளாதார சீர்திருத்தங்கள் கடந்த நாற்பது ஆண்டுகளாக எமது பெண்களுக்கு தந்த சீமந்தம்.

இது மட்டுமா? வெளிநாட்டு மாப்பிள்ளைமார் இங்கு வந்தாலும் தேடித்திரிவது ஜப்பான் பொம்மை போன்ற பெண்களையே சீதனம் இல்லாவிட்டாலும் பொம்பிளை வெள்ளையாய் வடிவாயிருக்க வேண்டும் என்பதுதான் தரகர்களின் சித்தாந்தம்.

உனக்குத் தெரியும் தானே, எனக்கு மேலே குறிப்பிட்ட இரண்டு தகுதிகளுமே யில்லை. ஏதோ, கலியாண ஆசை, இப்போது என்போன்ற பல பெண்களுக்கு கனவாகி விட்டது. ஆனால் இந்த இளவயதுக் காலத்திலாவது ஒரு சில வருடங்களாவது நன்றாக உடுத்தோம், நிறைவாகச் சாப்பிட்டோம், தோழிகளோடு கலகலப்பாக ஊர் சுற்றி கோயில் குளங்களைப் பார்த்தோம் என்ற மனநிறைவோடு பழைய அல்பங்களைப் பார்த்தாவது எமது பிற்காலத்தை களிக்கும் அற்ப ஆசைதான் எனக்குண்டு.

இதையும் நீ விகற்பம் என்று எண்ணி, எம்மைப் பழமைக்குள் முழுகிக்கொண்டு ஆண்வர்க்கத்துக்காகவே நிதமும் பயந்து ஒடுங்கி அவர்களின் அட்டகாசங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் நலிந்து வாழ வேண்டுமென்று விரும்புகிற நீங்கள் எப்படியோ ஆண்களின் நடத்தைகளைக்கண்டும் காணாதது போல் இருக்கிறது எமது சமுதாயத்தின் வழமையாகி விட்டது.

ஆகவேதான், நான் உங்கள் கூற்றுக்களை மறுக்கவோ அல்லதுஉன்னை மாற்றவோமுடியாது தானே. இன்றையபெண்கள்வருங்கால சமுதாயத்திற்குச்செய்யக்கூடியது நல்லசூழந்தைகளைப் பெற்று வளர்த்து எமதுவிழுமியங்களைப் பேண வழிவகுப்பதே. ஆனால் எமது சமுதாயத்தைப் பொறுத்த வரை இன்று எம்மவர்கள் எமது வாழ்க்கை நெறிகளை மறந்து பிறநாட்டு நடைமுறைகளை பின்பற்றும் நிலைதான் வளர்ந்து கொண்டிருக்கிறது. எனவே நான் உன்னோடு வாதாடும் நிலையில் இல்லை; உன்னைச் சமாதானப்படுத்த முற்படவில்லை.

ஏதோ, உணர்ச்சிப் பிரவாகத்தில் எழுதிய வரிகள் இவை. நீங்கள் எனது அம்மா. எப்படியும் என்னை மன்னித்து மறப்பாய் தானே அம்மா!

இப்படிக்கு
உங்கள் அன்புமகள்,

# நல்லாரை நாடி...

(மூன்றாம் பக்கத் தொடர்)

இராமர் புகழ் பெற்றார். சொல்லின் செல்வனாக இராமரால் போற்றப்பட்ட அனுமன் இராமரைச்சேர்ந்து ஒழுகியதனாலே இராமபக்தனாக வணக்கத்துக்குரியவனாக விளங்குகிறான்.

துர்க்குணம்படைத்த இராவணனை விட்டு நீங்கி விபீஷணன் இராமரைச் சேர்ந்ததனால் நல்லவனானான். இலங்கையை ஆளும் பாக்கியத்தையும் பெற்றார்.

*நல்லவரை நாடுங்கள்*

இது போலவே, நல்லாரைக் கண்டு அவர்கள் புத்திமதிகளைக் கேட்டு உரையாடி வாழ்வதில் பாண்டவர்கள் புகழ் பெற்றார்கள். சூதாடி நாடு நகரிழந்து வனவாசஞ் செல்லப்புறப்பட்ட பாண்டவர்கள் அங்குள்ள பெரியோர்களை மதித்து ஆசி பெற்றே சென்றனர். அநியாயங்கள் நடைபெறுவதைப் பார்த்தும் அண்ணனை மதித்து அவன் சொல்லுக்கடங்கி நடந்த தம்பிமாரைப் பார்க்கிறோம். போர்க்களத்திலே எதிரணியில் நின்ற உறவினரையும் நல்லோர்களையும் கண்டு பேசியபின்பே ஆயுதமெடுத்துப் போராடினார்கள் பாண்டவர்கள். ஊரார் போற்றும் உத்தமர்களான பாண்டவர்கள், கிருஷ்ணரையோ வியாசபகவானையோ வேண்டிய போதெல்லாம் உரையாடி உபதேசம் பெறாமல் விட்டதில்லை.

இவ்விதமாக நல்லவர்களாக வாழ்வதற்கு நாம் நல்லவர்களை நாட வேண்டும். அவர்களுடைய சொற்களை அனுபவங்களைக் கேட்டு நடக்க வேண்டும்.

கல்வி அறிவும் வேறு வல்லமைகளும் இருந்தாலும் நல்லவர்கள் என்று இருப்பது தான் மிகவும் அவசியமானது. அதனாலே தான் வேலை தேடி விண்ணப்பம் அனுப்பும் போது நற்சான்றிதழ் என ஒன்றையும் கேட்கிறார்கள்.

உலகிலே பாண்டவர்களாயும் இராமலக்குமணராயும் உள்ளோர் மிகச்சிலர். துரியோதனனாதியர்களும் இராவணாதியர்களும் மிகப்பலர். பலராக உள்ள இவர்கள் வல்லமையுள்ளவர்களாகவுங் அறிவிலே மேம்பட்டவர்களாகவுங் கூட இருக்கலாம். ஆனால் அவர்களை உலகம் என்றும் மதிப்பதில்லை. அவர்கள் நல்லவர்களாகவும் மாட்டார்கள். இறைவனும் அவர்கள் பக்கம் சார்வதில்லை.

ஆகவே நாம் செயற்கரிய செய்யும் பெரியார் பக்கமே சார்ந்து ஒழுக வேண்டும். "தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும் துன்னற்க தீவினைப்பால்" என்ற வள்ளுவன் வாய்மொழியின்படி நம் மீது நாம் காதல் கொண்டு தீவினை எதனையும் செய்யாதிருப்போமாக; நல்லவர்களைச் சார்ந்து ஒழுகி நல்லவர்களாக வாழ்ந்து நாடு போற்ற வாழ்வோமாக.

✠

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# தீவுப் பகுதியில் படையினர் மீட்ட பொருள்கள் செயலகத்தில் ஒப்படைப்பு

## உரியவர் அடையாளங் காட்டிப் பெறலாம்

நவாலி. ஜூலை 5

தீவுப்பகுதி பாதுகாப்புப் படையினரால் தீவுப்பகுதி மக்களினது உபயோகிக்க முடியாத ஒரு தொகுதி சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் ஸ்கூட்டர்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள். குளிர்சாதனப்பெட்டிகள், வானொலிப்பெட்டிகள். தெளிகருவிகள், மணிக்கூடுகள், மின்சார உபகரணங்கள், உடுபுடைவைகள் போன்ற இன்னும் பல வாசனைப் பொருள்கள் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டு தற்பொழுது கோண்டாவிலிலுள்ள புனர்வாழ்வு புனரமைப்பு களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன.

தீவுப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் இப்பொருள்களைப் பார்வையிட்டுத் தகுந்த ஆதாரங்களுடன் ஆவணமூலம் காண்பித்தால் அவற்றைப்பெற்றுக்கொள்ள முடியும் — என்று யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

இப்பொருள்களை இம்மாதம் 8 ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதி வரை நேரில் பார்வையிடவும் பொது மக்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. பொருள்களை அடையாளங் கண்டு அத்தாட்சிப்படுத்துபவர்கள் அவற்றை எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இப்பொருள்களின் விவரப் பட்டியல்களை யாழ். செயலக விளம்பரப் பலகையிலும் செயலக களஞ்சிய கிளையிலும் பார்வையிடலாமென்று யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

(ஐ-100)

## வன்னித் தபாலில் 'பிலிம்றோல்' மீட்பு!

வவுனியா, ஜூலை 5

வவுனியாவில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்ட தபால் பொதியில் இருந்து பிலிம்றோல், றேடியோ ஆகியன கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க வாகனம் ஒன்றில் எடுத்துச்செல்லப்பட்ட தபால் பொதிகள் [illegible]னியா தடை முகாமில் [illegible]து சோதனை செய்யப்பட்டதாகவும் -

அச்சமயம் ஒரு பொதியில் தபால்களுடன் பிலிம்றோல், றேடியோ ஆகியன கைப்பற்றப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அந்த வாகனத்தில் சென்ற தபால் ஊழியரான ஜெபநேசன் என்பவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

தபால் பொதிகள் யாவும் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

(உ-3-164)

### [illegible]மலை தில்லைநகரில்

## 250 தமிழ்க் குடும்பங்களை வெளியேறப் பணிப்பு

திருகோணமலை, ஜூலை5

திருகோணமலை உள்துறைமுக வீதியில் உள்ள தில்லை நகர் பகுதியைச் சேர்ந்த 250 தமிழ்க் குடும்பங்களை இருப்பிடங்களை விட்டு வெளியேறுமாறு அரசு த்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவைக் கண்டித்து அப்பகுதி மக்கள் திருமலை பிரதேச செயலகம் முன்பாக நேற்றுமுன் தினம் மறியல் செய்தனர்.

30 வருட காலமாக அந்த இடத்தில் தாங்கள் வாழ்ந்து வருவதாகவும்—

பாரிய கல்வீடுகளை அமைத்துத் தங்கியிருக்கும் எம்மை வெளியேறுமாறு கேட்பது நியாயமற்றது என்றும்—

தெரிவித்து அவர்கள் மகஜர் ஒன்றைப் பிரதேசச் செயலரிடம் கையளித்தனர்.

காணி, விவசாயத்துறை அமைச்சருக்கும் அவர்கள் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்,

(உ-3)

## குளம் புனரமைப்பு

தென்மராட்சி, ஜூலை 5

மந்துவில் குமரணிக்குளம் 'கெயர்' நிறுவனத்தினரால் ஒருலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

புனரமைப்பு வேலைகளை பிரதேச செயலக நிர்வாக உதவியாளர் செ. முருகையா உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இக் குளம் புனரமைப்பு வேலைகள் இப்பகுதி மக்களின் பங்களிப்புடன் நடைபெறுகிறது.

(ஐ-117)

# விவசாயப் பயிற்சி நிலையத்தில் மாதிரிப் பண்ணை அமைக்கத் திட்டம்

திருநெல்வேலி அரசாங்க விவசாயப் பயிற்சி நிலையத்தில் நிலவும் குறைபாடு குறித்து 24 - 06 - 1998 ஆம் திகதிய உதயனில் வெளியான செய்தி மடலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதில் தரப்பட்ட தகவல்கள் சில குறித்து மேற்படி பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரியான ச. சின்னத்துரை (உதவி விவசாயப் பணிப்பாளர்- கல்வியும், பயிற்சியும்) மேலதிக விவரங்கள் தந்துள்ளார்.

அந்த விவரம் வருமாறு;

வெளியிடப்பட்ட கருத்துகள் குறிப்பிட்ட நிலையம் கடந்த 15—20 வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலையோடு இப்பொழுது இருக்கின்ற நிலை ஒப்பிட்டு எழுதப்பட்டுள்ளது. இந்த நிலையம் 1980 ஆம் ஆண்டு வரை விவசாயப் பாடசாலையாக இயங்கி வந்தபோது ஒரு வருட விவசாயப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மாணவர்கள் இங்கு தங்கியிருந்து பயிற்சி பெற்றனர். பயிற்சியில் சித்தியடைந்து சான்றிதழ் பெற்ற மாணவர்களில் அனேகமானோர் விவசாயத் திணைக்களத்தில் விவசாய விரிவாக்க சேவையாளராகக் கடமையாற்றி வந்தனர். இவர்கள் அரச தீர்மானத்தின்படி 1990 ஆம் ஆண்டு முதல் கிராம சேவை அலுவலர்களாக மாற்றப்பட்டனர்.

1980 ஆம் ஆண்டு வரை இந்நிலையத்தில் போதனாசிரியர்கள், விரிவுரையாளர்கள், சிற்றூழியர்கள், பண்ணைத் தொழிலாளர்கள் உள்ளடங்கலாக மொத்தம் 40 பேர் கடமையாற்றினர். ஒருவருடப்பயிற்சிப் பாடத்திட்டத்திற்கேற்ப பயிர்ச் செய்கை, கால்நடை வளர்ப்பு, தேனீவளர்ப்பு, மனையியல் போன்ற துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அரச தீர்மானத்தின்படி 1981 ஆம் ஆண்டு முதல் இந்தப்பாடசாலை, மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையமாகப் பெயர் மாற்றப்பட்டு, ஆளணியினரும் குறைக்கப்பட்டு, ஓராண்டுப் பயிற்சிகளும் நிறுத்தப்பட்டு, விவசாயிகளின் சுயவேலைகளை ஊக்குவிப்பதற்காக குறுகியகால விவசாயப் பயிற்சிகளை நடத்துமாறு அனுமதிக்கப்பட்டது. அதற்கு ஏற்ப தொடர்ந்து குறுகியகால விவசாயப் பயிற்சிகளை அளித்து வந்துள்ளது. இந்நிலையத்தில் இப்போது இருக்கும் ஆளணியினர் மொத்தம 15 பேர் ஆவர்.

1983 ஆம் ஆண்டு முதல் இம்மாவட்டத்தில் நிலவிய சூழ்நிலை காரணமாக இந்நிலையத்தில் அசைவற்ற, அசைவுள்ள சொத்துக்களுக்குப் பாதிப்புகளும், இழப்புகளும் ஏற்பட்டன; 28-10-1995 முதல் 30-04-1996 வரை ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வினால் கூடிய தாக்கம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட கட்டடங்கள், சொத்துக்களில் ஒரு பகுதி சர்வதேச நிறுவனங்களின் உதவியோடு நிவர்த்தி செய்யப்பட்டு, வட கிழக்கு மாகாணவிவசாயத் திணைக்களத்தின் நிதி உதவியுடன் தொடர்ந்து குறுகியகால விவசாயப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. இப்பொழுது நடைபெறும் பயிற்சி நெறிகளுக்குத் தேவையான பயிற்சித் துண்டங்கள் பராமரிக்கப்படுகின்றன. செயன்முறைப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. அத்தோடு தரமான மரக்கறிப்பயிர் நாற்றுக்களும், பழமரநாற்றுக்களும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. விவசாயத்தில் ஆர்வமுடைய ஆசிரியர்களும், மாணவர்களும் இந்நிலையத்திற்கு வந்து தமது விவசாய அறிவை அதிகரிக்கும் நிலையமாகவும் இது விளங்குகின்றது.

இந்த வருடம் சர்வதேச நிறுவனம் ஒன்றின் உதவியுடன் மாணவர் தங்கியிருக்க விடுதிகளும், மற்றைய வசதிகளும் புனரமைக்கப்படவுள்ளன. அதன் பின்பு இப்பொழுது நடைபெறுகின்ற குறுகியகால விவசாயப் பயிற்சிகளுடன் 2 - 3 நாள்களுக்கு இந்நிலையத்தில் தங்கியிருந்து பெறுகின்ற குறுகியகால விவசாயப் பயிற்சிகளும் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ளது. தொடர்ந்து தரமான மரக்கறிப்பயிர் நாற்றுக்களும், பழமரநாற்றுக்களும் உற்பத்தி செய்து விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பயிர்ச் செய்கையோடு கால்நடை வளர்ப்பினையும் சேர்ந்து ஒருங்கிணைந்த விவ[illegible] அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.


வடமராட்சியின்

தூரிகை நுண்கலை வளாக
மனைப் பொருளியல் பிரிவின்

**கண்காட்சி**

காலம்: ஜூலை 6 ஆம் 7 ஆம் திகதிகள்

இடம்: தூரிகை நிலையம்
(மத்திய மகாவித்தியாலய வீதி)
நெல்லியடி.

காலை முதல் மாலை வரை அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்.

★ தையல் ★ கேக்ஐசிங் ★ பூவேலை
★ முடியலங்காரம் ★ சித்திரம்
புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

(57336)



THE REFUGEES REHABILITATION ORGANISATION Ltd.

'MUYARCCI' SKILL DEVELOPMENT TRAINING CENTRE

[Non - Profit making Organisation]

APPLICATION FOR TRAINING IN DIPLOMA IN COMPUTER AWARENESS - 98. 1

Objective: An awareness Programme for service workers mainly in non governmental organisations and other service sectors.

Duration: 4 months

Basic Qualification: G. C. E. -Advanced Level 4 Passes with credit in English in the G. C. E. O/L

Closing Date: 15 - 07 - 1998

Contact: THE SECRETARY
T. R. R. O. Ltd.
106, 4th Cross Street
Jaffna.


Course Contents:

1. Introduction To Computing
2. Operating Systems
3. Application Packages M. S. - Office - 97
4. Data Base Management
5. Programming Concepts With Pascal / C ++
6. Introduction multimedia, Networking and Internet.

[C/1472]



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 23 — 05 — 1947

விண்ணில் 11 — 07 — 1996

கொல்லங்கலட்டி

**வைரவி இராசதுரை (போமன்)**

(திருவரங்கம் லொறி உரிமையாளர்)

திதி: ஆனி ஏகாதசி

எம் வாழ்வின் ஒளிவிளக்கே!
என்றும் உமை மறவோம்.

— குடும்பத்தினர்

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

[54349]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணை கோம்பயன் மணல் மயான
வான் பயிர் பிரயோசனங்களை

## ஒரு வருட குத்தகைக்கு விடுதல்

எதிர்வரும் 12—07—98 ஞாயிறு மாலை 4 மணிக்கு மேற்படி மயான வான் பயிர் பிரயோசனங்களை பகிரங்க குத்தகை கூறல் மேற்படி மயான மடத்தில் கூறப்படும்.

குத்தகைக்கு எடுப்போர் உடனடியாக 50 வீத கூறல் தொகையை கட்ட வேண்டும். மிகுதித் தொகை ஒரு வாரத்துக்குள் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாவிட்டால் கட்டப்பட்ட 50 வீத பணம் மீளளிக்கப்பட மாட்டாது. கூறல் தொகை மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக இருந்தால் அதனை ரத்து செய்யும் உரிமை மயான பரிபாலன சபைக்கு உண்டு.

க. குணராசா
தலைவர்

(சி/ 4192)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14 — 9 — 1916



மறைவு
05 — 07 — 1992

அமரர்
**தம்பிப்பிள்ளை வீரசிங்கம்**

அன்பாய் ஆதரித்தும் பண்பாய் உபசரித்தும்
நெஞ்சில் நிறைந்து விட்ட உத்தமரே
ஆண்டுகள் பல ஓடி மறைந்ததுவே எம்மைப் பிரிந்து கண்ணீர் விடுகின்றோம்.
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.

அரசடி வீதி,
இருபாலை,
கோப்பாய்.

(56329)

## மாதாந்த உதவிப்பணம்

தென்மராட்சி பிரதேசத்தில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் மற்றும் காசநோய் புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான ஜூன் மாதக் கொடுப்பனவுகள் பிரதேசசெயலக சமூக சேவைகள் பிரிவினரால் அந்தந்தப் பிரிவு அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தோரில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோர்களின் ஜூன் மாதக் கொடுப்பனவும் அவர்கள் தங்கியுள்ள பிரிவு அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-117)

## வாகனங்களுக்கு லைசென்ஸ்

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இவ்வருடத்திற்குரிய வரி செலுத்திய வாகனங்களுக்கான வட்டமிடப்பட்ட லைசென்ஸ் பத்திரங்கள் பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ் வருடத்திற்குரிய வாகன வரி செலுத்திய பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்து லைசென்ஸ் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## தாதிகள் தேவை

தாதியாகப் பணிபுரிய விரும்பும் பெண்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

Dr. க சிவனடியான்
யாழ். வீதி,
மானிப்பாய்.

(57305)

# அகதிகள் போராட்டம் கைவிடப்பட்டது

திருகோணமலை, ஜூலை 5

யாழ்ப்பாணத்துக்கு செல்ல கப்பல் வசதி செய்து தருமாறு கோரி திருகோணமலை கண்ணாடித் தொழிற்சாலையில் உள்ள ஆயிரம் அகதிகள் 2 ஆவது நாளாக வெள்ளிக்கிழமை மேற்கொள்ளவிருந்த உண்ணாவிரதப் போராட்டம் அன்று காலையே கைவிடப்பட்டது.

கொழும்பில் இருந்து திரும்பிய திருமலை பட்டணமும் சூழலும் பிரிவு பிரதேச செயலர் வி. வேலும்மயிலும் அகதிமுகாமுக்குச் சென்று அளித்தவாக்குறுதியை அடுத்தே உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

எதிர்வரும் 10 ஆம் திகதி கப்பலில் யாழ்ப்பாணம் அனுப்புவதாக அவர் அங்கு உறுதி மொழி வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ 3)

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

MARUTHANAMADAM
CHUNNAKAM

## யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

SHORT COURSE IN AGRICULTURE

இலவச குறுகிய கால விவசாயப் பயிற்சி நெறி

4 மாத காலம் பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம், விவசாய மூலதத்துவம் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய இலவச சாதனா, போதனா பயிற்சி நெறிக்கு க. பொ. த. (சாதாரணம்) கல்வி கற்ற 16-26 வயதுக்கிடைப்பட்ட இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் பயிற்சி நெறி காலத்தில் உதவு தொகை வழங்குவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

இப் பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் **17 07-98** காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்புப் பத்திரம், கல்வித்தகைமைப் பத்திரம், கிராம சேவகரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:

அதிபர்.
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனாமடம், சுன்னாகம்.

[57343]

# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர், நிர்மாணத் திணைக்களம் யாழ்ப்பாணம்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாணப் பிரதம பொறியியலாளரினால் 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது காரியாலயத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் எம்—9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.

ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கிய பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தகுதியுடையோர் உரிய கேள்வி வைப்புப்பணத்தை யாழ்ப்பாண, நிர்மாணத் திணைக்கள, நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

### கேள்வி வைப்புப்பணம்

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|
| 1. நயினாதீவு வைத்தியசாலை பராமரிப்பும் திருத்தவேலையும் | 500/- | 8,700/- |
| 2. நீர்வழங்கலும், வடிகால் திருத்த வேலையும் நயினாதீவு வைத்தியசாலை | 250/- | 4,100/- |
| 3. காரைநகர் வைத்தியசாலைத் திருத்தவேலை | 500/- | 7,600/- |

கேள்விப் பத்திரங்களை 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் திகதி பிற்பகல் 4.45 மணிவரை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் பெற்றுக்கொள்ளலாம்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்க முடியும்.

எந்திரி. ந. சுந்தரமூர்த்தி
பிரதம பொறியியலாளர்,
நிர்மாணத்திணைக்களம்,
யாழ்ப்பாணம்

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
நிர்மாணத்திணைக்களம், கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




**செல்வி கேமரசீகா**

3/3, பிரப்பங்குளம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணையைச் சேர்ந்த

கணேசமூர்த்தி கலாராணி

தம்பதிகளின் செல்வப் புதல்வி ரசீகா

தனது முதலாவது பிறந்த தினத்தை அவரது இல்லத்தில் இன்று (05-07-98) வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அப்பம்மா, மாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

க. கணேசமூர்த்தி
(தந்தை)

(57333)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சாதகமும் பாதகமும்

கிருஷாந்தி வழக்கில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு ஒரு திருப்பு முனையாக அமைந்துள்ளது. படையினர் எதையும் செய்யலாம்; ஆனால் தப்பித்து விடலாம் என்றநிலை இனிமேலும் தொடராது என்பது இவ்வழக்குத்தீர்ப்பின் மூலம் நிறுவப்பட்டுள்ளது. இந்த வகையில் இதனை ஓர் ஆரம்பமாகக் கொள்ளலாம்.

படையினர் பொதுவாக, மிகக்குறிப்பாக, தமிழர்களை எவ்வாறும் இம்சிக்கலாம்; துன்புறுத்தலாம்; தாம் தண்டிக்கலாம்; அவற்றைச் செய்வதற்குத் தமக்குப் பாதுகாப்பு அல்லது விதிவிலக்கு உண்டு என்று கருதியே இதுவரை காலமும் அடாவடித்தனம் புரிந்து வந்தனர்,

ஆனால் கிருஷாந்தி வழக்கின் தீர்ப்பு அவர்களுக்கு ஒரு நல்ல படிப்பினையாகும்.

கிருஷாந்தி வழக்குத் தீர்ப்பை விட, அதில் சம்பந்தப்பட்ட முதலாவது எதிரி தெரிவித்த தகவல் எல்லோரையும் — மிகக் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழ்மக்களை — திகிலடையவும், அச்சமுறவும் வைத்துள்ளது.

கிருஷாந்தியும் அவரது தாயாரும், தம்பியாரும், அயல் வீட்டுக்காரரும் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட செம்மணிச் சுற்றாடலில் வேறு இடங்களில் கொலைசெய்யப்பட்ட 400 பேரின் சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளன என்ற தகவல் தமிழர்கள் அடக்கு முறையின் கீழேயே இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தெட்டத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

கிருஷாந்தி கொலைசெய்யப்பட்ட அதே காலத்தில் குடாநாட்டிலிருந்து நூற்றுக் கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டு "காணாமற் போனோர்" என்ற வகையில் சேர்க்கப்பட்டனர்.

மேலும் இதே காலப் பகுதியில் — 1996 ஜூலை — செப்ரெம்பர் காலப்பகுதியில் — காணாமற் போன இளைஞர் யுவதிகள் பற்றி, ஆகக் குறைந்தது அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்ற தகவல் தானும் கடந்த இருபத்திநான்கு மாதங்களாக அரசாங்கத்தினால் தெரிவிக்கப்படவில்லை.

இத்தகைய நிலையினால் கிருஷாந்தி வழக்கின் முதலாவது எதிரி கூறியது. பொய்யாக இருக்குமோ என்ற சந்தேகம் மக்களுக்கு எழுவதற்கு வாய்ப்பில்லை.

மனித உரிமைகளைப் பேணுவதில் மிகுந்த அக்கறையும், ஆர்வமும் இருப்பதாகக் கூறிக் கொள்ளும் அரசாங்கத்துக்கு, கிருஷாந்தி வழக்கின் தீர்ப்பு சாதகமான சில புள்ளியைக் கொடுத்த போதிலும் —

வழக்கின் முதலாவது எதிரியின் குற்றச்சாட்டு அதைவிடப் பன்மடங்கு பாதகமான புள்ளிகளைத் தேடிக் கொடுத்துள்ளது.

அரசாங்கம் இது விடயத்தில் என்ன சொல்லப் போகிறது? இனியும் சாக்குப் போக்குச் சொல்லிக் காலத்தைக் கடத்தலாமென்று நினைக்குமா?

# கைதானோர், காணாமற் போனோர் தொடர்பான விசாரணைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 5

கைது செய்யப்பட்டோர், காணாமற் போனோர் தொடர்பான மீள் விசாரணைகள் மீண்டும் ஆரம்பமாக உள்ளன.

எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். ஞானம்ஸ் ஹொட்டேலில் அமைந்துள்ள 512 ஆவது பிரிகேட் விசாரணைப் பிரிவில் நடைபெறவுள்ள விசாரணைகளுக்கு பின்வரும் 81 பேரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள், உறவினர்களை சமுகமளிக்கு மாறுயாழ். பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

அந்த 81 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:–

சதாசிவம் விவேகானந்தன் (மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி), தனானந்தன் ரவீந்திரன் (இல. 87/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.), நல்லசேகரம்பிள்ளை மணிவண்ணன் (வாதையடி றோட், மட்டுவில் தெற்கு.), கணேஷ் ரமேஷ் (கைதடி, நாவற்குழி தெற்கு.), சந்திரசேகரன் புவனேந்திரன் (மீசாலை கிழக்கு.), பண்டாரிரட்ணம் செல்வகுமார் (தச்சன்தோப்பு, கைதடி.), சுப்பிரமணியம் முகுந்தகுமார் (இல. 16, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.), பெர்ணான்டோ ஜெயகாந்தன் (43/2, புதுவீதி, கொய்யாத் தோட்டம்.), கந்தசாமி, புஸ்பலதா (மந்துவில் மேற்கு, கொடிகாமம்.), தமோதரம்பிள்ளை இதயகுமார் (மீசாலை, கிழக்கு).

சிவசுப்பிரமணியம் ரவீந்திரன் (கண்டிறோட், கைதடிச் சந்தி), கதிரவேலு விஜிதரன் (சரசாலை தெற்கு). ஆறுமுகம் தங்கராசா (மீசாலை மேற்கு, விக்கினேஸ்வரன் வீதி மீசாலை), வல்லிபுரம் பவானந்தன் (கச்சாய் றோட், கொடிகாமம்), சிதம்பரப்பிள்ளை பேரின்பநாதன் (கைதடி தெற்கு, நாவற்குழி), ஜோசப் கணேஸ்வரன் (இல, 93/3, டேவிற் றோட், யாழ்ப்பாணம்). கந்தசாமி புவனேந்திரராஜா (ஐந்துவீட்டுத்திட்டம், நாவற்குழி, கைதடி). இம்மானுவல் மரியா ஜெயசீலன் (நாவற்குழி, கைதடி), சிவானந்தன் ரமணன் (மீசாலை கிழக்கு, மீசாலை), தங்கவேல் சந்திரகுமார் (உப்புக்குளம் றோட், கொழும்புத்துறை).

மகாலிங்கம் நவச்செல்வம் (70/12, சென்றல்றோட், யாழ்ப்பாணம்.), அப்புத்துரை ஜெயரட்ணம் (318சி, புதிய செங்குந்தாவீதி, திருநெல்வேலி கிழக்கு.), துரைசிங்கம் குணசேகரம் அலைஸ் சபீசன் (138/1, கொண்டடி றோட், குருநகர்), தர்மரட்ணம் தர்மவசீகரன் (அளவெட்டி மேற்கு,) சின்னத்துரை அம்பிகைபாலன் (வரணி இயற்றாலை), இளையதம்பி திருஞானச்சந்திரன் (217, கந்தாவில் கிழக்கு, கொடிகாமம்), நடராஜன் ஜீவரட்ணம் (வேம்பொடு கேணி), கம்பன் பாஸ்கரன் ('சரசாவி' கைதடி வடக்கு,) கோபாலசிங்கம் அம்பிகைபாலன் (நாவற்குழி, கைதடி), பொன்னையா ஜெயராஜா (நாவற்குழி தெற்கு, கைதடி).

நவரட்ணம் ஆனந்தராஜா (நாவற்காடு, அச்சுவேலி), சண்முகநாதன் முருகதாஸ் (215/19, இராசாவின்தோட்ட வீதி, யாழ்ப்பாணம்). கந்தர் விமலேந்திரன் (வரணி இயற்றாலை, வரணி), சிவகுருநாதன் ஆனந்தகிருஷ்ணர் (பத்திரகாளிகோவில் அண்மையில், திருநெல்வேலி), ஜெகநாதன் விஜயகுமார் (ஜும்மாபள்ளி வாசல்றோட்யாழ்ப்பாணம்), சின்னத்தம்பி ஜெயபாலன் (பலாலிகிழக்கு வயாவிளான்) கந்தசாமி ஞானபரன் (விடத்தல்பளை, மிருசுவில்), கிருஷ்ணபிள்ளை குணானந்தராஜா (பொலிகண்டி, வல்வெட்டித்துறை), ஆசிர்வாதம் பரணி (இராஜேஸ்வரி அம்மன் றோட், மல்வம் இணுவில்), பத்மநாதன் சுதர்சன / சுதாகரன் (நுணாவில்மேற்கு, சாவகச்சேரி),

வேலன் இரட்ணசிங்கம் (கோவில் றோட், புன்னாலைக்கட்டுவன்), ஆறுமுகம் அமலன் (கச்சாய் றோட் கொடிகாமம்), செல்வராஜா கோபிராஜ் (இல, 5ஏ/2 முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை), இரட்ணசிங்கம் ராஜ்குமார் (கைதடி கிழக்கு), சின்னத்தம்பி திருவருட்செல்வன் (கோவிலாக்கண்டி, கைதடி), கந்தவன் குகதாஸ் (கோப்பாய்மத்தி), கந்தையா ஸ்ரீதரன் (ஒட்டுவெளி மிருசுவில்), மரியாம்பிள்ளை ஞானரஞ்சன் (பிடாரி கோவிலடிச் சந்தி ஆனைக்கோட்டை), முத்துத்தம்பி கெங்காதரன் (கமலாசனிறோட், சரசாலை தெற்கு), பூபாலசிங்கம் ஜெயலலிதா (மறவன்புலவு சாவகச்சேரி),

இராஜதுரை சுரேஸ்குமார் (டிஸ்பென்சரிலேன், கல்வியங்காடு), சின்னட்டி கோபாலகிருஷ்ணன் (கைதடி தெற்கு, கைதடி), சரவணமுத்து முன்னீஸ்வரநாதன் (தனங்கிளப்பு, சாவகச்சேரி), சின்னராசா றஞ்சன் (இணுவில் றோட் இணுவில் மத்தி), சின்னத்தம்பி ஞானேந்திரன் (குடமியன் வரணி, நாவற்காடு), சின்னத்துரை கதிரவேற்பிள்ளை (கப்பூது, கரவெட்டி) திருநாவுக்கரசு சுதாகரன் (தனங்கிளப்பு, சாவகச்சேரி), வல்லிபுரம் பாஸ்கரன் அரசர் கேணி, பளை), ஐயம்பிள்ளை நிருபன் (காரைககால்றோட், இணுவில்), சரவணமுத்து ஸ்ரீதரன் (பழையவாய்க்கால் சாவகச்சேரி),

தம்பிப்பிள்ளை கோவிந்தசாமி (அராலிறோட்; சங்கானை), தங்கவடிவேல் ராஜேந்திரகுமார் (ஆத்தை அல்வாய்), துரைராஜா சஜீவன் (சுதுமலை, தெற்கு, மானிப்பாய்), தர்மலிங்கம் புவனேந்திரன் (கச்சாய் றோட், கொடிகாமம்), சுந்தையா புஸ்பராஜா (நாவற்குழி, தச்சன்தோப்பு), இரட்ணம் கிருஷ்ணகுமார் (தொல்புரம் மேற்கு), சுப்பிரமணியம் இராசலிங்கம் (கம்மனை மூளாய்), வேலுப்பிள்ளை உதயகுமார் (வேவில் கொடிகாமம், வடக்கு), கந்தவனம் சிவராசா (மடத்தடி, சாவகச்சேரி), பரமேஸ்வரன் குமுதினி (வித்தியாலய றோட், சங்கரத்தை), பரமேஸ்வரன் பரணீதரன் (வித்தியாலய றோட். சங்கரத்தை).

ஜெபனையா மதியலிங்கம் (தொல்புரம் மேற்கு). அந்தோனிமுத்து கண்ணன் (சாவகச்சேரி வடக்கு), காசித்தம்பி தர்மரட்ணம் (மீசாலை கிழக்கு). பொன்னம்பலம் கண்ணதாசன் (தச்சன் தோப்பு, கைதடி). பொ. குகதாஸ் (114/2, இராமநாதன் றோட், யாழ்ப்பாணம்), வேலுமூர்தவி (132, கஸ்தூரியார றோட், யாழ்ப்பாணம்), நவரட்ணம் குமார் (கோப்பாய் றோட், கோப்பாய்). நடராஜா புதிய ராஜா (அம்மன்கோயிலடி, கோப்பாய் வடக்கு), சுரேஸ்வரன் சுமதி (நெடுங்குளம் றோட், யாழ்ப்பாணம்), பழனி சுரேஸ்வரன் (நெடுங்குளம்றோட், யாழ்ப்பாணம்), அரியக்குட்டி ஜெயானந்தன் (கோட்டைக்காடு, மல்லாகம்), வினாசித்தம்பி கணேசமூர்த்தி (சுழிபுரம் மத்தி, சுழிபுரம்). (ஐ)

## நாளை

ஆனி - 22

திங்கட் கிழமை

திதி: துவாதசி

முன்னிரவு 9.09 வரை.

நட்சத்திரம்: அனுஷம்

பின்னிரவு 01.41 வரை.

சுபநேரம் 11.58 - 1.28

ராகுகாலம்: 07.28 - 08.58

(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்க நேரப்படி)

## உதயவாக்கு

மதிப்பு என்பது பதவிகளைப் பெற்றிருப்பதல்ல. அவற்றைப் பெற தகுதியுள்ளவர்களாக இருப்பதே.

— அரிஸ்டோட்டில்

## வெள்ளி விழா

திருநெல்வேலி ஜூலை5

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் 25 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு கழகத்தினால் நடத்தப்படும் வெள்ளிவிழாவும், புதிய நிர்வாகசபையின்பதவி ஏற்பு வைபவமும் எதிர்வரும் 12ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமைஅன்று முற்பகல்சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-135)

## தடைகாண் பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம், ஜூலை 5

எழுதுவினைஞர் தரம் II வகுப்பு "அ" இல் உள்ள உத்தியோகத்தர்களுக்கான திறமை காண் தடைப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து இருவர் சித்தியடைந்துள்ளனர்.

செ. பிரசாத், திருமதி கோ. பாலசுந்தரம் ஆகிய இருவருமே மேற்படி பரீட்சையில் சித்தி அடைந்த எழுதுவினைஞர்கள் ஆவர்.

(அ)

## ஆலயங்களில் உயிர்ப்பலி; நல்லைஆதீனம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

நல்லை ஆதீனம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்து கோயில்களில் உயிர்ப்பலி நடத்தப்படுவதை வன்மையாகக் கண்டித்து வந்திருக்கிறது. முதலாவது குருமகா சந்நிதானம் தனது சுதாப்பிரசங்கங்கள்மூலம் இதனை வலியுறுத்தி வந்ததை சைவ சமயம் சார்ந்த அனைவரும் அறிவர். இதனையே இரண்டாவது குருமகா சந்நிதானமும் வலியுறுத்தி வருகிறார்.

கோயில்களில் உயிர்ப்பலி நடத்துவது பற்றி நல்லை ஆதீனம் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது—

இந்துக் கோயில்களில் உயிர்ப்பலியிடுவது பற்றி பலர் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார்கள். தற்போது மீண்டும் ஆலயங்களில்பலியிடும் முறை தலையெடுத்துள்ளதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அனைத்து உயிர்களின் மீதும் அன்பு செலுத்துபவனை, உயிர்களுக்கு துன்பம் விளைவிக்காதவனை அனைத்து உயிரினங்களும் கைகூப்பி வணங்கும் என்ற வள்ளுவன் வாக்குக்குஇணங்க சைவசமயத்தவர்கள் வாழ வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-8)

## பட்டப் பின் கல்வி டிப்ளோமா

வலி.தென்மேற்கு, ஜூலை 5

பட்டப் பின் கல்வி டிப்ளோமாவிற்கு யாழ். திறந்த பல்கலைக்கழகத்தின் ஊடாக விண்ணப்பித்து ஆவணங்கள் கிடைக்கப் பெற்றவர்கள் உடன் தொடர்பு கொள்ளுமாறு திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார்.

வங்கியில் பணம் செலுத்திய ஆவணங்கள் மற்றும் நிழற் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் கொண்டு வந்து ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்டோர் கேட்கப்பட்டுள்ளனர்.

(ஐ-185)

## நயினை யாத்திரிகர்கள் போக்குவரத்து

பிரசித்திபெற்ற நயினை நாகம்மாள் திருக்கோவில் விசேட உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் குடாநாட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான அடியார்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற நயினையை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கி விட்டதை யாழ்ப்பாண வீதிகள் எங்கும் காணக்கூடியதாக உள்ளது. தரைப்போக்குவரத்துக்கான ஊர்திகள் மிக மிக மட்டுப்படுத்தப்பட்டே நடைபெறுகின்றன. சாதாரணமாக 50 பேர் பயணம் செய்யக் கூடிய ஊர்திகளில் 150 – 250 வரையிலான யாத்திரிகர்கள் மந்தைகளை ஏற்றுவதுபோல் ஏற்றப்படுவது சர்வசாதாரணமாக நடைபெறுகிறது.

மறுபுறம் கடலிற் செல்லும் மிகபபழைய படகுகளில் 50 பேர்கள் மாத்திரம் பயணம் செய்யக்கூடியவற்றில்150-200 பேர்கள் ஏற்றப்பட்டுமிக அவலமான நிலையில் கடற்பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இச் செயல்கள் எல்லாம் மிகச் சாதாரணமாக கடந்த சில தினங்களாக நடைபெற்று வருவதை அடியவர்களால் காணக் கூடியதாக உள்ளது. மிக ஆபத்து நிறைந்த கடற்பயணம் உட்படத் தரைப்பயணங்களைக் கண்காணிக்க அரச அதிகாரிகள் உட்பட தொண்டு நிறுவனங்கள், பாதுகாப்பு அதிகாரிகள் எது வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது இருப்பது அடியவர்களுக்குப் பெருங் கவலையை ஏற்படுத்தி உள்ளது.

அடுத்துவரும் தினங்களில் அடியவர்கள் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரிக்கும். அதற்கு முன்னர் பொறுப்பு வாய்ந்த உயர் சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் இவை குறித்து உடனடி நடவடிக்கை எடுப்பார்களா?

நா. வீ. மு. நவரத்தினம்
தலைவர்

நயினாதீவு யாத்திரிகர் நலன்புரி
சேவைக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு மாதம் வீட்டுப் பாவனைக்குப் பாவித்த புதிய SRIRAM HONDA 650 E ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு. விலை நேரில். விவரங்களுக்கு: சீ. திலகேந்திரராஜா, 265/1, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். (கமலா ஸ்ரோர்ஸ் அருகில்) (57331)

வீட்டுத் தளபாடங்கள், அலுவலக மேசை, கண்ணாடி அலுமாரி, கட்டில், சோக் கேஸ்கள், குசன் செற்றி, கதிரைகள், மின்சார உபகரணங்கள், பனசொனிக் XBS கசட் றேடியோ (50w) மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. பாலா நுணாவில், கல்வயல் 2 ஆம் ஒழுங்கை, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. (C/4182)

## இறைச்சிக்கோழி

BAIRAHA FARM. TASTY BROILERS FOR SALE பகிறா சுவையான இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. 1½ கிலோவிலிருந்து விற்பனையாகிறது. சுத்தம் செய்து கொடுக்கப்படும். [5] 17 கோயில் வீதி, யாழ்ப்பாணம். (57155)

புறோயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல 101, பலாலி வீதி, (இலுப்பையடிச்சந்தி அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம். (வாடிக்கையாளருக்கு சந்தை விலையிலும் குறைத்துக் கொடுக்கப்படும்). [57344]

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. அருள் ஆச்சிரமம், இல 5, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். [57341]

இறைச்சிக் கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்குவீதி, யாழ்ப்பாணம். (சின்னக் கடைக்கு அருகில்.) [57351]

இறைச்சிக்கோழி (Broilers) கல்பேட்ஸ் என்பன குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுப்படும். தொடர்பு: 40, கோயில்வீதி, யாழ்ப்பாணம். [57350]

புறோயிலர் கல்பேட் இறைச்சிக் கோழி நியாய விலையில் விற்பனைக்கு உண்டு. சுத்தஞ் செய்து கொடுக்கப்படும். (அரைக் கோழி ரூ.120 இலிருந்து ஞாயிறில் பெற்றுக் கொள்ளலாம்) 54/2, சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். [57348]

புறோயிலர் இறைச் சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. கீர்த்தி பூரணவாசர், ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை, சாவகச்சேரி. [சி/4181]

## கண்டெடுக்கப்பட்டது

தங்கச் சங்கிலி S உடன் இணைந்தபடி கடந்த 3 தினத்தின் முன் கண்டெடுக்கப்பட்டது (திருநெல்வேலி சந்திக்கும், கந்தர்மடம் சந்திக்கும் இடையில்) தகுந்த ஆதாரத்துடன் வரவும். பி. றெ. நிவாகரன் இல. 14, 1 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர். [57340]

## கலர் மீன்கள்

பல இன கலர் மீன்கள் விற்பனைக்குண்டு. ஐ. அருளானந்தம், 588/8, நாவலர் வீதி, அரியாலை. (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன் ஒழுங்கை) பார்வையிடும் நேரம், நண்பகல் 12 மணிக்குப் பின். [57353]

## நூல்

பொது அறிவுப் பூங்கா நூல் வெளிவந்து விட்டது. மாணவர் புலமைப் பரிசில் தேர்வுகள், பொதுப் பரீட்சைகள் போன்றவற்றிற்கும், அறிவை வளர்க்கவும் உபயோகமானது. தொகுப்பாசிரியர் ஆ. சண்முகலிங்கம், விலை ரூபா 33. எங்கும் கிடைக்கும். 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (57298)

## தவறிவிட்டது

சிவபதி அருமைநாயகம் ஆகிய எனது 746151195V இலக்க அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். மாநகரசபையில் அல்லது எனது விலாசத்தில் அதாவது 17/19, பண்டாரக் குளம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [57334]


# அறிவித்தல்

எமது சங்கத்தில் கப்பற் கட்டணம் இன்றி கொண்டு வரப்பட்ட கோழித்தீவனங்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. எமது சங்கத்தில் கோழிக்குஞ்சுகள் பெற்றவர்கள் குறித்த சிட்டைகளைச் சமர்ப்பித்து தங்களுக்கு வழங்கப்படக் கூடிய தீவனத்தை விரைவில் பெற்றுக் கொள்ளவும். குறைந்தளவு தொகை தீவனங்களே இருப்பில் இருப்பதால் விரைவில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி/4195)

# வாழ்த்துகின்றோம்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற
குறிக்கோளுக்கமைய
இன்முகம் காட்டி உற்றவிடத்துதவி தன்னலங் கருதாது
பிறர் நலம் புரியும்,

## கே. கே. வேலாயுதபிள்ளை
அவர்கள்

கிராம உத்தியோகத்தர் தரம் I- க்கு பதவி உயர்வு
பெற்றுள்ளமையிட்டு பாராட்டுவதுடன்
கிராம உத்தியோகத்தர் அதி விசேட தரம்
கூடிய விரைவில் பெற வேண்டுமென மனதார
வாழ்த்துகின்றோம்.

ஐயாத்துரை நற்குணநாதன்,
பிள்ளைகள்
உடுவில் சார்ந்தவர்கள்.

ஐயாத்துரை அமரகுலசிங்கம்
குடும்பம்
காங்கேசன்துறை
சார்ந்தவர்கள்.

( 57321 )



# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

# விசேட அறிவித்தல்

அம்பிகை அடியார்களே!

அம்பிகையைத் தரிசிப்பதற்காக வருகை தரும் அடியார்களுக்கு ஆலய வீதியில் அமைந்திருக்கும் கல்யாண மண்டபத்தில் தினந்தோறும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தப் பணியைத் தொடர்ந்து செய்வதற்கு அறங்காவலர் சபை தீர்மானித்துள்ளது. இந்த அன்னதானப் பணியில் பங்கு கொள்ள விரும்பிப் பலர் விண்ணப்பம் செய்துள்ளனர். இதில் பங்கு கொள்ள விரும்பும் ஒருவர் தாம் விரும்பும் நாளொன்றிற்கு (ஆங்கிலத் திகதி) (5000/-) ஐயாயிரம் ரூபாவை ஒருமுறை மட்டும் செலுத்தினால் போதும். அவரின் பெயரால் ஆண்டுதோறும், குறிப்பிட்ட திகதியில் அன்னதானம் தொடர்ந்து வழங்கப்படும். இப்பணியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் முதலில் தமது விருப்பத்திற்குரிய தினத்தைப் பதிந்து கொள்ளவும். பணத்தை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியின் **12330** கணக்கு இலக்கத்தில் அல்லது கொழும்பு, புறக்கோட்டையில் உள்ள வர்த்தக வங்கியின் **01 - 2426285 - 01** இலக்க கணக்கில் வைப்பிலிடலாம். அல்லது பொருளாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு என்ற முகவரிக்கு காசோலையாகவும், காசுக்கட்டளை மூலமும் அனுப்பி வைக்கலாம். இத்திட்டத்தில் சொற்ப வெற்றிடம் மட்டுமே இருப்பதால் இயலக் கூடியளவு விரைவில் பதிவுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(57186)


## எல்லா இன மக்க...

(நான்காம் பக்கத் தொடர்)

நடத்தி சிங்களமக்களின் பேரன்பையும், பெருமதிப்பையும் பெற்றுச் சிறந்த பய பக்தியுள்ள குருவாகப் பணியாற்றினார்.

இவர் 1971 ஆம் ஆண்டு தொடக்கம் 1978 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தின் குருமுதல்வராக நியமனம் செய்யப்பட்டு, முதலில் நல்லூர் பரிசுத்த யாக். கோபு ஆலயத்திலும் பின்னர் சுண்டுக்குளி பரிசுத்த யோவான் ஸ்நானகர்ஆலயத்திலும் சேவையாற்றி யாழ்ப்பாண மக்களின் நல் மதிப்பையும், அன்பையும் பெற்றுக் கொண்டார்.

இவர் யாழ்ப்பாணத்தில் குருமுதல்வராகப் பணியாற்றியதோடு யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் நிர்வாகியாகவும், சபைகளின் ஐக்கியத்திற்கு குரல் கொடுப்பவராகவும் பணிபுரிந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் பெற்று1978ஆம் ஆண்டு தொடக்கம் 1986 ஆம் ஆண்டு வரை கொழும்புப் பகுதியில் பிரதம குரு முதல்வராய் பணியாற்றியதுடன் அன்றைய அத்தியட்சகர் வெளிநாடுகளுக்குச் செல்லும் காலங்களில் கொழும்பு திருமண்டலத்தின் பதில் பேராயராகவும் பணிபுரிந்து தமிழ், சிங்களம், பறங்கி சமூகங்களைச் சேர்ந்த குருமார்களின் அன்பையும், ஆதரவையும் பெற்றுக் கொண்டார்.

1987ஆம் ஆண்டு கொழும்பு திருமண்டலத்தின் 12 ஆவது பேராயராகவும் சுதேசிய பேராயர்களில் நான்காவதாகவும், முதலாவது தமிழ் பேராயராகவும் திரு நிலைப் படுத்தப்பட்டார். அவர் பதவிப் பொறுப்பேற்ற காலம் வட பகுதியில் போர் அனர்த்தங்களில் மக்கள் மிகவும் துன்ப நிலையடைந்திருந்த வேளையாகும். அப்போது யாழ்ப்பாணத்திற்கு மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வருகை தந்து இங்குள்ள அங்கிலிக்கன் சபைகளுக்கு விஜயம் செய்து எல்லா மக்களையும் கண்டு பேசி ஆறுதல் கூறிச் சென்றமையை நாம் என்றும் மறக்க முடியாது.

இவர் யாழ்ப்பாணத்தில் குரு முதல்வராகப் பணியாற்றிய காலத்தில் யாழ்ப்பாண நற்செய்திக் கழகத்திற்கு புத்துயிரூட்டி சிறப்பான சேவையை மேற்கொண்டதுடன், நற்செய்திப்பணியையும் விரிவுபடுத்திச் செயலாற்றினார் மருதனார்மடம் கிறிஸ்த சேவா ஆச்சிரமத்தின் வழிநடத்தல் குழுவில் இணைந்து செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

- செ. ப. ஜீவானந்தம்

## சமுதாயத்தில்...

(நான்காம் பக்கத் தொடர்)

சொந்தபந்தங்கள் உண்டு. என்று வாழும் இக்காலத்திலே சமுதாயத்தில் புரையோடிப் போன புண்களை மாற்றுவதற்கு யார் முன் வருவார்?

அவர் செய்வார் இவர் செய்வார், நான் ஏன் செய்ய வேண்டும், எனக்கேன் இந்த வம்பு என்று விலகி ஒதுங்கும் முதுகெலும்பில்லாதவர்களே இன்று பெருகி வருகின்றார்கள். எதனையும் நியாயப்படுத்தித் தப்பித்துக் கொள்ளும் சமூகமாகவே இளைய சமூகம் மாறிவருகின்றது.

இயேசு சொன்னார்: ''வேலையாளர் கூலிக்கு உரிமையுடையவர்கள். வீடு வீடாகச் செல்ல வேண்டாம். நீங்கள் போகும் ஊரிலே உங்களை ஏற்றுக் கொண்டால் உங்களுக்குப் பரிமாறுவதையே உண்ணுங்கள். (லூக். 10:8)

நிறைவைக் காணாமையே இன்றைய பிளவுகளுக்குக் காரணமாகும். நீ நல்லதைச் செய்து பார்; உண்மையை உரைத்துப்பார், உன்னை அறியாமலே பல நற்குணங்களும்; நற்செயற்பாடுகளும் தானாக ஊற்றெடுக்கும். கிடைப்பதோடு திருப்தி கொள்; வீண் அவாக் கொள்ளாதே; நடப்பது நல்லதாக அமையும். நம்முடைய செயல்கள் நாலு பேரைத் திருந்த வைக்கும். சூழவுள்ள சமூகமும், சமுதாயமும் இதனால் ஈர்க்கப்படும். நாம் தொடர்வோம் நகர்வு தானாக ஏற்படும்

★

## சைவ சமயத்தின்...

(நான்காம் பக்கத் தொடர்)

டுப் பாடினார். அது அவருக்கு அருவ வணக்கமாயிற்று. அப்பாடல் மூலம் சிவபாதவிருதயர் இறைவனை ஒலி மூலம் கண்டார். ஆகவே, அது அவருக்கு அருவுருவ வணக்கமாயிற்று. அப்பாடல் மூலம் நாம் உருவம் அமைத்து இறைவனை வணங்குகிறோம். ஆகவே அது நமக்கு உருவ வணக்கமாயிற்று.

இறைவன் சக்தியோடு கூடிப் பிரிவிலனாய், பின்னமில்லாதவனாய் நிற்குந் திறத்தினையும் இலக்கண முடிவு காட்டி அவர் விளக்குந் திறனும் இன்பம் பயப்பதாகும். தமிழில் ஒருவர் என்ற சொல் ஆண், பெண் ஆய இருபாலாரையும் உள்ளடக்கிய சொல்லாய் வழங்குகின்றது.

''ஒருவர் என்பது உயரிருபாற்றாய், பன்மை வினை கொள்ளும் பாங்கிற்று'' என்பது நன்னூற் சூத்திரம், இறையைக் கருதுவகற்கு, ''ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவம் ஒன்றால்— அதனை ஒருவன் என்கோ இருவருக்கும் பொதுவாக, ஒருவர் என்பதோர் உயர்சொல் இல்லெனில் யான் மற்று என் செய்கேனே'' என்கிறார் குமரகுருபரர் ''எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைத்த'' 'பந்தணை விரலியும் நீயும்' என்கிறார் மாணிக்க வாசகர். இதனால், அம்மையப்பர் அர்த்த நாரீஸ்வரர், அம்மையே அப்பா என்பன மூலம் பெண்ணும் ஆணுமாய ஒருவர் என்பது புலனாகின்றது.

''ஒருவர் என்னும் பெயர் நிலைக் கிளவி இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை'' என்ற தொல்காப்பியச்சொல்லதிகார நூற்பாவும் (191) நன்னூலாரதும், பண்டிதர் அவர்களதும் கூற்றுக்களை அரண் செய்வதையும் ஒப்பு நோக்கி, அக்கருத்திலிருந்து 'இறை ஒருவர்' என்ற கருத்து மேலும் விளக்கம் பெறுவதைப் பாராட்டி அமையாது,

திருவருட் சத்தியாகிய அம்மையானவள் ஆன்மாக்களின் மலத்தினைப் பேதித்து அவற்றை இறைவன் பாற் சேர்ப்பதை மாணிக்கவாசகரின் திருவெம்பாவை அடியின் ஒருபகுதியான பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை' என்ற சொற்றொடர் துலக்கமாய் எடுத்துக் காட்டும். இதே சொற்றொடரைத் தலையங்கமாகக் கொண்ட நான்காவது இயல் தக்க உதாரணங்களோடு திருவருட்சக்தியின் செயற்பாட்டினை விளக்குகிறது. 'உதித்தலும் மறைதலும்' என்ற இறுதியியல் காளிதாசன் கதை, கயமுகாசுரன் கதை, பரிபாடலில் வரும் கந்தன் திருவவதாரக் கதை என்பவற்றை எடுத்துக்காட்டி, சிவமூர்த்தங்கள் அவதார மூர்த்தங்கள் என்பவற்றிற்கிடையேயான வேறுபாடுகள் தெளிவாக்கப்படுகின்றன.

தொகுத்துக் கூறுவதாயின் சைவ சமய தத்துவங்கள் பலவும் இலக்கிய, இலக்கண, சாத்திர, தோத்திர அடிப்படைகளில் 55பக்கங்களைக் கொண்ட இச்சிறிய நூலிலே எளிய இனியதர்க்கவியல் கடவாத உரைநடையிலே தரப்பட்டுள்ளன எனலாம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை ஆதீனம், இந்துசமய பேரவை
# நிவாரண வெட்டுக்குக் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை ஆகியவை நிவாரண வெட்டைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளன.

நல்லை ஆதீனம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பல்வேறு அவலங்களுக்கு மத்தியில் வாழும் மக்கள் பெற்று வரும் நிவாரணமும் நிறுத்தப்பட்டால் 'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது' போன்ற செயலுக்கு இது ஒப்பாகும். ஆகவே நிவாரணவெட்டினை இலங்கைஅரசு நிறுத்த முயற்சிப்பதை நல்லை ஆதீனம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இன்று வட பிரதேசத்தில் வாழும் மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

சொந்த இடங்களுக்குப் போகமுடியாமலும், தொழில் வாய்ப்பினை இழந்தும், நோய்களினால் பீடிக்கப்பட்டும் பலதரப்பட்டபிரச்சினைகளுக்கு மத்தியில் நலிந்து போயுள்ளார்கள்.

எனவே இலங்கை அரசு இத்தகைய சந்தர்ப்பத்தில் நிவாரண வெட்டை அமுல் படுத்தக்கூடாது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இந்துசமயப் பேரவை**

இந்து சமயப் பேரவை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போர்காரணமாக சொந்த வீடுகளையும், தொழிலையும் இழந்து வாழும் ஏழைத் தமிழ் மக்களுக்கு வழங்கும் இலவச உலர் உணவு விநியோகத்தை நிறுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையை யாழ். இந்து சமயப் பேரவை பலமாக எதிர்க்கின்றது.

இத்தகைய உணவு விநியோக நிறுத்தம் மனிதாபிமானமற்றசெயல்என்பதைத் தெளிவு படுத்துகின்றோம். உறவினர்களை இழந்து, வீடுகள்அழிக்கப்பட்டும், தொழில் ஏதும் இன்றி ஏதிலிகளாக வாழும் தமிழ் மக்களுக்கு வழங்கி வரும் நிவாரணத்தை அரசு நிறுத்த தீர்மானித்திருப்பது மனிதாபிமான உலகால் கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

அனைத்து உதவிகளையும் வழங்கி மக்களைச் சொந்த இடங்களில் சுய கௌரவத்துடன் வாழ்வதற்கு வழி செய்வோம் என்று கூறிய அரசு அதை நிறைவேற்றாது நிவாரணத்தை வெட்டுவது தமிழ் மக்களுக்குச் செய்யும் மாபெருந் துரோகச் செயலாகும்.

அனாவசியதான முறையில் போரை நடத்தி இந்நாட்டில் வாழும் அப்பாவி மக்களைப் போர்க்களத்தில் கொன்று குவிப்பதை எமது பேரவை வன்மையாகக் கண்டிக்கின்றது.

நீண்ட நெடுங்கால வரலாற்றுத் தொடர்புபட்ட இந்துக்களையும் பௌத்தர்களையும் எதிரிகளாக்கும் இப்போரை உடனடியாக நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு இந்துசமயப் பேரவை ஜனாதிபதியை பகிரங்கமாக கோருகின்றது.

போரை நிறுத்தி நமது நாட்டில் அமைதியான வாழ்வை மக்களுக்கு வழங்குவதல்லாமல் நிவாரணத்தை வெட்டுவதன் மூலம் இப்பிரச்சினைக்குத் தீரவு காணமுடியாது என்பதை உறுதியாகத் தெளிவுபடுத்துகின்றோம், தமிழ் மக்கள் சுயகௌரவத்துடன் வாழ்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியை மீண்டும் கோருகின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8-15)


## இதய அஞ்சலி



### தில்லைநாதன் ஐயா விமலேந்திரன் ஐயா

கட்டப்பிராய் ஸ்ரீ முத்து மாரியம்மன் தேவஸ்தானத்தில் நீண்டகாலமாக உற்சவகால அலங்கரிப்பாளராகக்கடமையாற்றிய விமலேந்திரன் ஐயா அவர்களின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சி அடைவதுடன் துயரில் வாடும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, இதய அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

-பரிபாலனசபை.

ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,
கட்டப்பிராய். (57367)


## தொண்டர் ஆசிரியர் கவனத்துக்கு

21-6-1998இல் நடைபெற்ற தொண்டர் ஆசிரியர்களின் தீர்மானப்படியும், 30-6-1998 இல் நடைபெற்ற தொண்டர் ஆசிரியர்களின் நிர்வாக சபைக் கூட்டத் தீர்மானப்படியும் 7-7-1998 இல் தொண்டர் ஆசிரியர்களின் பொதுக்கூட்டம் நடைபெறும்.

உறுப்பினர்கள் யாபேரும் சமுகம் தருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இடம்: கோப்பாய் ம. வி, காலை 10-00 மணிக்கு

அதிபர் சங்கம்,
தொண்டர் ஆசிரியர்கள்.

57363)


## கண்ணீர் அஞ்சலி




யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஆரம்ப கால உறுப்பினரும், பொருளாளரும் ஆகிய

திரு. அ. நல்லதம்பி
அவர்களின் துணைவியார்

### திருமதி புனிதவதி நல்லதம்பி

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

அங்கத்துவ நிறுவனங்களும்,
ஊழியர்களும்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற
நிறுவனங்களின் இணையம்,
இல. 100, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (57358)


## சமய நிகழ்வுகளில்

புலோலி வடமேற்கு ஸ்ரீ முருகையன் ஆலயவருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை முதல் 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (ஐ-109-173)

★ ★ ★

சுன்னாகம் ஐயனார் தேவஸ்தான சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு நடைபெறும். நண்பகல் அன்னதானமும், பிற்பகல் 3.30 மணிக்கு திருக்கல்யாணமும் இடம்பெறும். மாலை 5,30 மணிக்கு சுவாமி பூந்தண்டிகையில் வீதிவலம் வருவார். (ஐ-ரீ)

★ ★ ★

நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீமுத்துவிநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேக தினத்தை முடிவாகக் கொண்டு நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை தினமும் காலை 10 மணிக்கு நவகலச அபிஷேகமும், விசேட பூசையும் நடைபெறவுள்ளன. (ஐ-8)

★ ★ ★

மறவன்புலோ கலையாபரணன் கோட்டை அருள்மிகு வள்ளியம்மன் திருக்கோயில் கஜவல்லி, மஹா வல்லி சமேத சண்முகநாத சுவாமி நூதனப்பிரதிஷ்டாமஹாகும்பாபிஷேகம் நாளை திங்கள் காலை 7 மணிக்கு இடம் பெறவுள்ளது.

மாலை 3 மணிக்கு விசேட தீபாராதனை. சண்முகார்ச்சனை, தேவார பாராயணம் என்பன இடம்பெற்று முருகப் பெருமான் வீதி உலா வருவார். (இ-7)

★ ★ ★

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயிலின் 11 ஆம் திருவிழா... திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

### நல்லூர் உற்சவ காலத்தில்
# வாகனப்போக்குவரத்துக்கு ஐந்து வீதிகள் தடை

யாழ்ப்பாணம், ஜூலை. 5

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தையொட்டி நல்லூர் ஆலயச் சுற்றாடலில் வழமை போல 5 வீதிகள் வாகனப் போக்குவரத்துக்கு உற்சவ காலங்களில் தடைசெய்யப் படவுள்ளன.

சங்கிலியன் வீதி – கோயில் வீதிச் சந்தி, பருத்தித்துறை வீதி - நல்லூர் குறுக்குத் தெருச் சந்தி, அரசடி வீதி – பருத்தித்துறை வீதிச் சந்தி, கோயில் வீதி (யு. என். எச். சி. ஆர். முன்றல்), செட்டித் தெரு அடங்கிய ஐந்து வீதிகள் வாகனப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்படும் என்று மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

உற்சவ நாள்களில் பருத்தித்துறை வீதியால் யாழ். நகருக்கு வரும் வாகனங்கள் முத்திரைச் சந்தையால் கச்சேரி நல்லூர் வீதி – நாவலர் வீதி – ஆனைப்பந்தி ஊடாக யாழ். நகரை அடையும்.

இதே போல பருத்தித்துறைக்கு நகரிலிருந்து புறப்படும் வாகனங்கள் ஆனைப்பந்தி - நாவலர் வீதி - கச்சேரி நல்லூர் வீதி - முத்திரைச் சந்தை ஊடாக பருத்தித்துறை வீதிக்குச் செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 28 ஆம் திகதி அதிகாலையிலிருந்து இந்த வீதித் தடைகள் அமுல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை ஆலயச் சுற்றாடலில் கடலைக் கடை, தேநீர்க்கடை மற்றும் விற்பனை நிலையங்கள் வழமை போல் இயங்கவுள்ளன. (இ-5-6-15)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 5

திருநெல்வேலி அபிராமி பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2:30 மணிக்கு திருநெல்வேலி இ. த. க. பாடசாலை அதிபர் க. ஜெயானந்தன் தலைமையில் நடைபெறும்.

நல்லூர் பிரதேச செயலந் உதவி பிரதேச செயலர் சி. வேல்முருகோன்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## விரைவில் கொடுப்பனவு

தென்மராட்சி, ஜூலை 5

வன்னிப் பகுதிகளிலிருந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சொந்த வீடுகளில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கான மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான ரூபா 5 ஆயிரம் விரைவில் பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவினரால் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## வெள்ளோட்ட விழா

யாழ்ப்பாணம், ஜூலை 5

உடுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோயில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு விசேஷ பூசை ஆராதனைகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்திர கலாலய ஸ்தபதி விஸ்வப்பிரம்ம ஸ்ரீ நாகரத்தினம் மகேந்திரனால் நிர்மாணிக்கப்பட்ட புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்டம் நண்பகல் 11 மணிமுதல் 12 மணிவரையான சுப வேளையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் நல்லைஆதீன குருமுதல்வர், பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ நமசிவாயக் குருக்கள், யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத்தலைவர் பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள். ஆசியுரையுடன் வரவேற்புரை, சிறப்புரைகள் வாழ்த்துரைகள் என்பன இடம் பெறும்.

விழாவின் இறுதியில் சிறப்பு மலர் வெளியீடு இடம் பெறும். மலரின் முதற் பிரதியை நல்லை ஆதீனக் குருமுதல்வர் வெளியிட்டு வைப்பார்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா மலர் ஆய்வுரையை நிகழ்த்துவார்.

தொடர்ந்து சித்திரத் தேரமைத்த ஸ்தபதி நா. மகேந்திரனுக்கு "சித்திர ஞான சிரோன்மணி" எனவும் சிற்பக் கலைஞர் சு. சரவணபவனுக்கு "சிற்ப ஞான சிரோன்மணி" எனவும் நாதஸ்வர வித்துவான் எல். எஸ். ஜெகநாதனுக்கு "ஸ்வர லயஞான சுரபி" எனவும் பட்டங்கள் வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்குதலும் இடம் பெறும். (உ-4)

## கிராமசேவையாளர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 5

கோஷ்டி மோதல் ஒன்றில் சமரசம் செய்ய முற்பட்டதாகக் கூறப்படும் கிராம சேவையாளர் ஒருவர் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

வடமராட்சிப் பகுதியில் துன்னாலையில் இக்கோஷ்டி மோதல் இடம்பெற்றது.

கடந்த ஒரு மாதகாலமாக இடம் பெற்று வரும் இக் கோஷ்டி மோதலைத் தீர்த்து வைக்க எண்ணி சமரச முயற்சிகளில் ஈடுபட்டபோதே இவர் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த இந்தக் கிராம சேவையாளர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-36-15)

## காயம்

கட்டிட வேலையில் ஈடுபட்டிருந்தவேளை சாரமரத்தில் இருந்து தவறி விழுந்து ஒருவர் காயமடைந்தார்.

யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில் நேற்று இடம் பெற்ற இச்சம்பவத்தில், கைதடி நவபுரத்தைச் சேர்ந்த நன்னியர் ஆனந்தராசா வயது (40) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (இ-139-15)

## பயிற்சிப் பட்டறை

சிறுவர் உரிமைகள் சம்பந்தமான பயிற்சிப் பட்டறை ஒன்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் எதிர் வரும் 8 ஆம் திகதி சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் நடத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 13 பிரதேச செயலர் பிரிவுகளில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் இந்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டதாகவும் பிரதேச மட்டங்களில் சிறுவர் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுவருவதாகவும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் சிறுவர் உரிமைகள் திட்ட உத்தியோகத்தர் திருமதிஒலிவெட்ஜெனோவா தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் சிறுவர் உரிமைகள் சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தப்பயிற்சிப்பட்டறையின் நோக்கம் என்றும் அவர் கூறினார். (ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சிலுவை...

(முதலாம் பக்கத் தொடர்)

காணப்பட்டு நேற்று பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

எழுதுமட்டுவாள், விழுபனை என்ற இடத்தைச் சேர்ந்த சுந்தரம் திருவானந்த மூர்த்தி (வயது 29) என்பவரது சடலமே அடையாளம் காணப்பட்டது.

இவர் இருவருடங்களுக்கு முன் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து செயற் பட்டு வந்தார் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து இராணுவத்தினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன் சடலத்தைப் பெற்றோரிடம் ஒப்படைத்தனர். என்று தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து சடலத்தை தமது வாகனத்தில் எடுத்துச் சென்று அவரது இல்லத்தில் ஒப்படைத்தனர்.

(இ–139–15)


யாழ். கச்சேரி கிழக்கு

### கடுக்காயன்பதி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பாலஸ்தாபன விஞ்ஞாபனம்

நிகழும் வெகுதானிய வருஷம் ஆனி மாதம் 22 ஆம் நாள் 06 - 07 - 1998 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் வைரவப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும்.

பூர்வாங்கக்கிரியைகள் 5 - 7 - 98 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் ஆரம்பமாகும்.

இங்ஙனம்
பரிபாலன சபை

(சி/4198)



வாருங்கள்! கண்டு களியுங்கள்!!

புதிய உயர் கல்லூரி ஆதரவில்
யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்ற
வளர்ச்சி நிதிக்காக

வட்டுக்கோட்டை
நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழு
வழங்கும்

### ஆரணியத்தில் அடல்செறி
### வீரனும் விஜயனும்

(வட மோடி நாட்டுக்கூத்து)

விறுவிறுப்பும், கலை எழுச்சியும் பொங்கும்
பாரம்பரிய படைப்பு

(யா. பா க. மே. கழகம் நடத்திய போட்டியில் முதலாவது பரிசில் பெற்ற நாட்டுக்கூத்து.)

காலம்: 7-7-1998 செவ்வாய் பி. ப. 2.30 மணி
இடம்: கைலாசபதி கலையரங்கு

★ மண்டப வாயிலில் நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். பல்கலைக்கழகம் – தமிழ் மன்றம்

(சி/4199)


## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் ஐயா பாலசுப்பிரமணியம் ஐயா

அச்சுவேலி, பத்தமேனியைச் சேர்ந்த கனகரத்தினம் ஐயா பாலசுப்பிரமணியம் ஐயா (தீத்தாங்குளப் பிள்ளையார் கோயில் ஆதீன கர்த்தாவும், பிரபல முத்துச் சப்பற அமைப்பாளரும்) நேற்று (04-07-98) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சோமசுந்தரம் ஐயா (இடைக்காடு புவனேஸ்வரி அம்மன் கோயில்), மனோகரன் (யாழ். பல்கலைக் கழகம், புதிய உயர் கலைக் கல்லூரி மாணவன்), பவானி, அனுஷா, விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சவிதா, செல்வசேனக்குருக்கள் ஆகியோரின் மாமனாரும், சுகிர்தன், அமிர்தன், கவிதா, ஸ்ரீவக்சன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (05 — 07 — 98) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு தகனக் கிரியைக்காக கதிரிப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பா. சோமசுந்தரம் ஐயா
(மகன்)

தீத்தாங்குளம்,
பத்தமேனி,
அச்சுவேலி.

(சி/4202)

## உயிலங்குளம்..

(முதலாம் பக்கத் தொடர்)

ஊடான பயணிகள் போக்குவரத்தை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தியுள்ளதாகவும் — சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

நேற்று முதல் இக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள போதிலும் நேற்று அத்தியாவசிய தேவைகளின் பொருட்டு பயணம் செய்வோர் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் இன்று முதல் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது.

அதேவேளை வவுனியாப் பகுதியில் வாந்திபேதி நோய் பரவும் அபாயம் இருப்பதாகக் கூறி கடந்த 22ஆம் திகதி இப் பாதையூடான போக்குவரத்தைப் படையினர் இடை நிறுத்தி சில தினங்களின் பின்னர் மீண்டும் போக்குவாத்துக்கு அனுமதி வழங்கியிருந்ததும் தெரிந்ததே. (இ-164-9)

## லயன்ஸ் கழகம் பதவி அமர்வு

கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் 98/99 ஆம் ஆண்டுக்கான செயற்குழுவின் பதவி அமர்வு வைபவம் எஸ். என். விஸ்வலிங்கம் தலைமையில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக மாவட்டத் தலைவர் எஸ். பத்மநாதனும் சிறப்பு விருந்தினராக எஸ். எஸ் அருளானந்தமும் கௌரவவிருந்தினராகபிராந்தியத் தலைவர் வி. தில்லைநாதனும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கொக்குவில் லயன்ஸ் கழகத்தினரால் தெரிவு செய்யப்பட்ட கண்பார்வை குறைந்தவர்களுக்கு ஒரு தொகை மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (இ-5-6)

## பாரதீய ஜனதா...

(முதலாம் பக்கத் தொடர்)

இக்கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை தமிழ் நாட்டில் தி. மு. க. அரசைக் கலைக்கவேண்டும் என்ற தமது கொள்கையில் எந்தவித மான மாற்றத்தையும் தாம் கொண்டிருக்கவில்லை எனவும் ஜெயலலிதா தெரிவித்தார்,

பாரதீய ஜனதாக் கூட்டணி அரசுக்கு அ. தி. மு. கவின் ஆதரவைத் தொடர்ந்து பெறுவது தொடர்பாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ், மத்திய நிலக்கரித்துறை இணை அமைச்சர் பிலிப்றே, முன்னாள் மத்திய அமைச்சர் பூட்டா சிங் ஆகியோர் செல்வி ஜெயலலிதாவைத் தனித் தனியாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இருந்தனர். (இ-7)

## கிருஷாந்தி...

(முதலாம் பக்கத் தொடர்)

போதும் சகித்துக்கொள்ளக் கூடியது அல்ல என்பதை இராணுவத்தினருக்கும் பொலீஸாருக்கும் வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

பாதுகாப்பு படையினர் நடத்திய மிகவும் மோசமான மனித உரிமை மீறல்களுக்குக் கடும் தண்டனை வழங்கப் பட்டுள்ளது. இதுதான் முதல் தடவை ஆகும்.

பாதுகாப்பு படையைச் சேர்ந்தவர்கள் பாலியல் வல்லுறவு, காணாமல் போதல் மற்றும் கொலை ஆகியவற்றில் ஈடுபட்டதற்காக கிருஷாந்தி வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர்

கிருஷாந்தியின் தாயும், சகோதரனும், அயலவரும் காணாமல் போகவும்- கொலை செய்யப்படவும்- காரணமாக இருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

கடந்த பல காலமாகபாதுகாப்பு படையினர் கொலைகளைச் செய்த போதிலும் அதற்குரிய தண்டனையிலிருந்து தப்புவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. ஆனால் இத்தகைய தீர்ப்பின் பின்னர் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் நிலைமையில் ஒரு மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கிறோம்.

1996 செப்ரெம்பரில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்தக் கால கட்டத்தில் யாழ், குடாவில் காணாமல் போதல் உட்பட பலவகையான மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெற்ற போதே இந்தச் சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் பாதுகாப்பு அமைச்சு விசாரணைக் குழுக்களை நியமித்திருந்தது அதனைத் தொடர்ந்து இது போன்ற சம்பவங்கள் குறைவடைந்திருந்தன.

அகில இலங்கையிலும் காணாமல் போனோரின் எண்ணிக்கை, கிருஷாந்தி வழக்கு தொடரப்பட்ட பின்னர் கணிசமான அளவு குறைந்திருக்கிறது.

இத்தகைய தீர்ப்பு மனித உரிமைகள் முழு அளவில் பேணப்படுவதற்கு பெரும் பங்களிப்பை நல்கும் என்று நாம் நம்புகின்றோம்.

ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த வருடத்தில் சிபார்சு செய்ததற்கு அமைய மேலும் நூற்றுக் கணக்கானோரின் வழக்குகள் நீதி மன்றங்களில் தாக்கல் செய்யப்படவேண்டியுள்ளன.

இந்த மனித உரிமை மீறல் சம்பவங்களில் பலவும் முன்னைய அரசின் காலத்திலேயே நடைபெற்றன.

இந்தத் தீர்ப்பை வரவேற்றுச் சர்வதேச மன்னிப்புச் சபை ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளதுடன் கிருஷாந்தி குடும்பத்தில் எஞ்சியுள்ள ஒரே ஒரு உறுப்பினரான அவரது சகோதரிக்கு போதியளவு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளது.

இதே வேளை மனித உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக நடைமுறைப்படுத்தும் சட்டங்களை வலுப்படுத்துமாறும் பொலீஸாருக்கும், நீதி மன்றங்களுக்கும் அவர்களுடைய பணிகளுக்கு உதவும் விதத்தில் சுயேச்சையான உடற்கூற்று நிபுணர் குழு ஒன்றை நிறுவ வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-இ-5)


நாளை ஆரம்பம்
விக்னா
கல்வி நிறுவனம்
O/L DAY CLASS
பிரிவு - 5
ஆரம்பம்:
06-07-98
8-2 மணி
(57356)


## செம்மணி..

(முதலாம் பக்கம் தொடர்)

நீதியை நிலைநாட்டியதற்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிருஷாந்தி வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜ பக்ஷ சுமார் நானூறு பேரின் சடலங்கள் செம்மணிப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் காணாமல் போன 600 பேர் தொடர்பான தகவல்கள் கடந்த ஒன்றரை வருடகாலமாக தெரியவராமல் உள்ளன. எனவே செம்மணிப் பகுதியில் புதைகுழிகளைத் தோண்டி விசாரணைகள் மேற்கொள்வதன் மூலம் இவர்கள் தொடர்பான தகவல்கள் கூடச் சில சமயங்களில் வெளிவரக் கூடும்.

தென் பகுதியில் பல புதைகுழிகள் சங்கள் அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் தோண்டப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அது போல் இந்தப் புதைகுழிகளையும் தோண்டி விசாரணைகளைத் துரிதமாக மேற்கொள்வதற்குஉரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் அந்த பக்ஸ் செய்தியில் கேட்டுள்ளார். (இ-9)

## பற்றரி...

(முதலாம் பக்கத் தொடர்)

தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழந்தை அணிந்திருந்த ஒலி எழுப்பும் பாத அணியில் உள்ள பற்றரி சில வாரங்களுக்கு முன்னர் எவ்வாறோ குழந்தையின் தொண்டைக்குள் சிக்கி விட்டது.

இந்தக் குழந்தைக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் நோய்க்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கின.

பலதடவைகள் குழந்தை வாந்தி எடுத்தது. இதனை அடுத்து மருத்துவ சிகிச்சைக்காக குழந்தையை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அப்போது குழந்தைக்கு வாய் பேச முடியாமல் போய் விட்டது.

இக்குழந்தை 50 சத நாணயத்தை விழுங்கி விட்டதாக முதலில் கருதப்பட்டது.

பொரளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குழந்தையின் தொண்டையில் சிக்கிக் கொண்டது 50 சத நாணயம் அல்ல, ஒரு தட்டையான பற்றரிஎன்பது தெரிய வந்தது.

இந்த பற்றரியை குழந்தை எவ்வாறு விழுங்கியது என்பது பெற்றோருக்கு ஆச்சரியத்தைஏற்படுத்தியுள்ளது

குழந்தை அணிந்திருந்த ஒலி எழுப்பும் பாதணியில் இருந்து பற்றரி கழன்று வீழ்ந்திருப்பது தெரியவந்தது.

தொண்டைக் குழியில் இருந்தபற்றரி அகற்றப்பட்டு விட்டாலும். பற்றரியில் இருந்து வெளியேறிய இரசாயனப் பொருள் தொண்டைக் குழி. மூச்சுக்குழாய் ஆகியவற்றில் சுமார் ஓர் அங்குலப்பகுதியை சேதமாக்கியுள்ளது.

குழந்தையின் உயிரைப் பாதுகாக்க வேண்டுமானால் பாரிய சத்திரசிகிச்சை செய்ய வேண்டியிருப்பதாக சத்திர சிகிச்சை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## வன்னி வெடி...

(முதலாம் பக்கத் தொடர்)

கிருஷ்ணகுமார்—பூநகரி).

★ கலைவாணன் அல்லது அன்பன் (கிருஷ்ணபிள்ளை பாரதிதாசன்—யாழ்ப்பாணம்).

★ யப்பான் அல்லது அமுதன் (அமலோற்பவம் செம்மை—யாழ்ப்பாணம்).

★ இயல்வாணன் (முத்துமாணிக்கம் இரத்தினராசா —துணுக்காய்).

★ தென்பாண்டியன் (சிவக்கொழுந்து தர்மதாஸ்—யாழ்ப்பாணம்).

★ பூங்குந்தன் (ஸ்ரீகுமார் வரதன்—யாழ்ப்பாணம்).

★ இன்பக்கதிர் (சிவஅமூர் சவுர்தீன் — யாழ்ப்பாணம்).

★ இசைவாணன் (புஸ்பலிங்கம் சிவச்சந்திரன் — யாழ்ப்பாணம்).

★ நீலவாணன் (வேலு விவேகானந்தன்— யாழ்ப்பாணம்).

★ இசையரசன் (சிங்காரம் முத்துலிங்கம்— இரணைமடு).

(இ-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05 -07- 1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org